# ரமணோதயம்

ஜனவரி 2016
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20






Pranams from

SRIPAD STEELS PVT. LTD.,

Chennai

உதயம் 15 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2016

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2016


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | உபநிஷத் கூறும் கேள்வி யோகம் | பிர. கிரிதர ஜெகதீஷ் | 16 |
| 3 | இனிவரும் திருநாட்கள் | | 23 |
| 4 | அக்ஷர மணமாலை - ஒரு தத்துவக் கருவூலம் | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 25 |
| 5 | ஹஸ்தாமலக கீதம் | கிரேஸி மோகன் | 34 |
| 6 | ரிபு கீதை | தியாகராஜன் | 37 |
| 7 | அறியாமையின் அறியாமை | சு. பரமேஸ்வரன், கோவை | 43 |
| 8 | அருள் என்னும் அதிசய சக்தி | கீதா ரவிச்சந்திரன் | 55 |
| 9 | போராட்டம் | நொச்சூர் வேங்கடராமன் | 61 |
| 10 | ஸ்ரீ பகவான் - உபநிடதங்களின் உரை | Dr. T.M.P. மகாதேவன் | 63 |
| 11 | ரமணசாமி யாரு! | ரமண ராஜசேகர் | 72 |
| 12 | திரு. குருசாமி | | 73 |
| 13 | செய்திகள் | | 75 |

# ஆசிரியர் உரை

## தலைச்சுழியை மாற்றும் திருச்சுழி நாயகன்

ஒருசமயம் பகவான் சிவாநந்த லஹரி பற்றிப் பேசிக் கொண்டு இருந்தபோது, அதில் 'திராவிட சிசு' என்று குறிப்பிடப்பட்டுள்ளதே, அது யாரைக் குறிக்கிறது? பகவத் பாதர் தன்னையே குறிப்பிட்டுக் கொள்கிறாரா? என்று ஒரு அன்பர் வினவினார். அதற்கு விடையாக பகவான் அது திருஞான சம்பந்தரைக் குறிக்கிறது என்று விளக்கி, எங்ஙனம் மூன்று வயதுக் குழந்தை சம்பந்தர் தன் தந்தையுடன் சீர்காழி சிவன் கோயிலுக்குச் சென்ற சமயம், தந்தையார் குளத்தில் குளிப்பதற்காக மூழ்கியபோது தந்தையைக் காணவில்லையே என்று அஞ்சி, 'அம்மையே, அப்பா!' என்று தோணியப்பர் ஆலயம் நோக்கி அழுதபோது இறைவனும் இறைவியும் தோன்றி, உமையம்மை பால் கிண்ணத்தில் பொழிந்து தர, அதை அருந்திய சம்பந்தர் ஞானம் உடனே வரப் பெற்று தேவாரம் பாடிய நிகழ்ச்சியை விளக்கினார். (திருவருண்மொழி, அக்டோபர் 15, 1938). இங்ஙனம் இறையருளை அழுது பெற்ற சம்பந்தர் பற்றி, அதே அருள் விகாசத்தை அச்சத்தால், இறப்பு பற்றிய அச்சத்தை உண்முக நோக்கால் ஆராய்ந்து பெற்ற பகவான் விவரித்தார்.

ஏன் அந்த சம்பந்தக் குழந்தை அழுதது? குழந்தை மற்ற அதே வயதுக் குழந்தைகள் போன்று அச்சிறு வயதுக்கான அறியாமையாலோ, அன்றித் தந்தையைக் காணவில்லை



என்ற அச்சத்தாலோ அந்தக் குழந்தை அழுததோ? இல்லை மாற்றாக, தனது அவதார நோக்கத்தையும் தன்னுடைய மூல ஆத்மஸ்வரூபத்தையும் உள்ளுணர்வால் உணர்ந்த அந்தக் குழந்தை, பரமாத்மா வுடன் உடனே தொடர்பு கொள்ள விரும்பி அழுதது என்கிறார் சேக்கிழார்.

"தம்மேலைச் சார்புணர்ந்தோ
சாரும்பிள் ளைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார்
திருத்தோணிச் சிகரம்பார்த்து
அம்மேஅப் பாஎன்றென்று
அழைத்தருளி அழுதருள"

(பெரிய புராணம், திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 63)

தம்மேலைச் சார்பு உணர்ந்தோர் என்ற சொற்றொடர் வலிமை மிக்கது. சார்பு என்ற சொல்லிற்கு தொடர்பு என்பது பொருள். மேலைச் சார்பு என்னில் பரத்துவமான தொடர்பு என்பது பொருள். இதுவே அவரது அவதார நோக்கம். இதுவே சைவம் மீண்டும் தழைக்க தமிழ்நாட்டில் போடப்பட்ட பிள்ளையார் சுழி (சம்பந்தரும் காழிப் பிள்ளையார் என்றே அழைக்கப்பட்டார் அன்றோ).

அதேபோன்று அத்வைத ஞானம் தழைக்க மற்றொரு சுழி 1879 இல் திருச்சுழியில் போடப்பட்டது. சார்பு உணர்ந்து என்று ஆழ்மனத் தொடர்பினை சேக்கிழார் உணர்த்துவது போன்றே பகவானும் குறிப்பிடுகிறார்.

"தன்னுளம் தழைக்கச் தன்பதம் எனக்குத் தந்தனன்
சிவக்கச் சின்மயம் செழிக்கத் தன்மயம்
செகத்தில் துன்னும் செம்பொருப்புச் செம்மலே"

(நவமணிமாலை 8)



"உலகோர் உள்ளத்தில் ஆன்மிக உணர்வு செழிக்கவும் கர்ம வாசனைகள் அழியவும், சின்மயம் சிறக்கவும் ஞான போதம் செழிக்கவும் என்னை உலகில் அவதரிக்க வைத்தான்" என்கிறார் பகவான்.

பகவானது ஞான எழுச்சி மதுரையில் அவர் சார்ந்த மரணானுபவத்தால் உதித்தது. உடலை விட்டு உண்முக நோக்குடன் மரணானுபவம் பெறும்போது ஞானம் அங்கே முகிழ்க்கிறது. ஜீவ போதத்தை நாம் முயன்று விடும்போது அந்த மரணானுபவத்தால் சிவபோதம் உதிக்கும் என்று பகவானின் அநுபவத்தையே திருத் துருத்தி தேவாரத்தில் சம்பந்தரும் பாடுகிறார்.

"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து
இம்மண்ணின் மேல்

*பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்புவிட்டு*
*இறக்குமாறு காட்டினாய்க்கு இழுக்குகின்றது*
*என்னையே”.*

*(திருமுறை 2.98.5)*

உடம்பினை விட்டு பகவான் பெற்ற மரணானுபவம் இறைமையை நோக்கி அப்பாலகனை இழுத்ததை சம்பந்தர் பாடலின் ஈற்றடிகள் உணர்த்துகின்றன.

இறைவனது திருவடிகளை மறக்க இயலாத என்னை இப்புவி உலகில் பிறந்து ஞானத்தைப் பரப்பும்படிக்கு மனத்தினை மயக்கி பிறக்கச் செய்து என் அவதாரத்தை களித்தான் என்கிறார் காழிப் பிள்ளையார். இது நம்மைப் போல் கர்ம வசத்தால் பிறந்த சரீரம் அல்ல அது கர்மத் தொடர்பே இல்லாத ஒரு வியக்தியை நோக்கிப் பரம்பொருள் உலகில் சென்று பிறந்த ஞானத்தைப் பரப்புவாய் என்று கட்டளை இட்டது.

சகத்தில் தன்மய ஞானம் செழிக்கவும், சின்மய உணர்வு ஒளிரவும், வாசனைகள் அழியவும் ஞானம் பரப்புவதற்காக இப்பிறவியை இறைவன் எனக்கு அருளினான் என்று பகவான் கூறியதன் பிரதிபலிப்பாகவே சம்பந்தர் வாக்கும் ஒளிர்கிறது.

“இறைவன் அடியாரிடம் நேருக்கு நேராகச் சகத்தில் சென்று பிறப்பாய் என்று கூறினாலும், அதை ஏற்பது கடினம். எனவே என் மனத்தினை மயக்கி, அந்த மையலில் இருக்கும்போது பிறக்கச் செய்தான்” என்கிறார் சம்பந்தர். அதுபோன்றே பகவானும்

*“யாரும் அறியாது என் மதியினை மருட்டி*
*எவர் கொளை கொண்டது அருணாசலா”*

*(மணமாலை 89)*

*“செப்படி வித்தைகற்று இப்படி மயக்குவிட்டு*
*உருப்படு வித்தைகாட்டு அருணாசலா”*

*(மணமாலை 33)*

*"பித்துவிட்டு எனைநேர் பித்தனாக்கினை அருள்*
*பித்தம் தெளிமருந்து அருணாசலா"*

*(மணமாலை 66)*

ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காகப் பிறக்கச் செய்து அந்த அவதார நோக்கம் முற்றுப் பெற்ற உடன், மீண்டும் அந்த வியக்தியைத் தன்னுள் பரம்பொருள் ஈர்த்துக் கொள்கிறது என்பதையும் 'இறக்குமாறு காட்டினாய்' என்ற சொற்றொடர் உணர்த்துவதாகவும் பொருள் கொள்ளலாம்.

சம்பந்தர் பால் அருந்திய பின்னர் என்ன நிகழ்ந்தது. அவர் அடைந்தது எத்தகைய மெய்யுணர்வு என்பதை சேக்கிழார் விளக்குகிறார்.

*"சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகும் சிவ ஞானம்*
*பவம் அதனை அற மாற்றும் பாங்கில் ஓங்கிய ஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானந்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்த நிலையில்"*

*(பெரிய புராணம், திருஞானசம்பந்தர் வரலாறு, பாடல் 70)*

"ஞானோதயம் சம்பந்தர் ஆத்மாவில் முகிழ்ந்த உடனே அக்குழந்தையில் ஒரு மாபெரும் பரிணாமம் உண்டாகிறது. இறைவனைத் தவிர, வேறு எதையும் எண்ணாத மெய்ஞானம், பிறவிச் சூழலை உடனே அறுக்கும் ஆத்ம ஞானம், ஒப்புமையே இல்லாத சகல கலைகளிலும் தேர்ந்த கலை ஞானம், உணர்வில் ஓங்கிய பர ஞானம் அனைத்தும் சம்பந்தர் உள்ளத்தே முகிழ்த்தது அந்தத் தருணத்தில்" என்கிறார் சேக்கிழார்.

பகவானின் ஆத்ம சாட்சாத்காரம் முகிழ்த்த போது பகவானுக்கும் இத்தகைய எல்லை கடந்த பலதுறை ஞானம் வந்ததைக் காண்கிறோம். சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம் சம்பந்தர்க்கு நேரிட்டது போல், ஆத்ம சிகரத்தில் ஒளிர்ந்த பகவானுக்கும் திருப் பெருகு ஞானம் எழுந்து, அருணாசலன்மீது பெரும் காதலுடன் அருணாசல துதி பஞ்சகத்தைப்

பாடி அருளியதே உவமை இல்லாக் கலைஞானம். சம்பந்தர்க்கு வாய்ந்ததுபோல், பள்ளிப் படிப்பையே பாதியில் விட்ட பகவான் கவிதை வல்லுனராகத் திகழ்ந்து, வெண்பா வேந்தராகவும் ஒட்டக் கூத்தரையும் விஞ்சும் சந்தக் கவிச் சிங்கமாகவும், ஆழ்ந்த ஆத்மிக உண்மைகளை தெளிவான தமிழ்ப்பாக்களாக இயற்றும் வல்லுநராகவும் கேட்ட கேள்விகட்கெல்லாம் தங்கு தடையின்றி பேருண்மைகளைத் தெள்ள விளக்குபவராகவும் தமிழ் மட்டுமன்றி சமஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு போன்ற பல மொழிகளிலும் அடிப்படை பயிற்சியே இன்றி ஆற்றலுடன் கவிபாடும் ஞானம் வாய்ந்தவர் அல்லவா? இதற்கெல்லாம் அடிப்படையாக அவர் இளம் வயதில் அடைந்த ஆத்ம சாட்சாத்காரப் பேருணர்வு அமைந்தது.

'பவம் அதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்' என்ற சேக்கிழார் சொற்றொடர் பகவானின் ஞான முகட்டினை தெளிவாக விளக்குகிறது. தன்னைப் பரமகுரு என்று சரண் அடைந்தவர் அனைவரது பிறவித் துன்பத்தையும் அறவே ஒழித்தது பகவானின் பேரருள்.

*"தெய்வம்என்று உன்னைச் சாரவே என்னைச்*
*சேர ஒழித்தாய் அருணாசலா"*

*(மணமாலை 48)*

*"...உன்உரு உனல்அற உன்னிட முந்நீர்*
*உறுசருக் கரைஉரு உருஎன உருஒயும்..."*

*(அருணாசல அஷ்டகம் 3)*

உன்னுடைய ஸ்வரூபத்தை எண்ணங்களின் இடையூறு எதுவும் இன்றித் தியானித்தால் கடலில் கரைந்த சர்க்கரை போல மனது தன் உருவத்தை இழக்கும் என்கிறார் பகவான்.

*"பாழினில் வீழாது ஏழையைக் காத்து உன்*
*பதத்தினில் இருத்தி வைத்தனையே"*

*(அருணாசல பதிகம் 4)*

சம்பந்தர் கூறும் இந்த உணர்வு அரிய மெய்ஞ்ஞானம் நம் ஆழ் மனத்தில் உள்ளது. அதை அடையும் வழியையும் பகவானே கூறுகிறார்.

"எழும்பும் அகந்தை எழும் இடத்தை நீரில்
விழுந்த பொருள் காண வேண்டி - முழுகுதல் போல்
கூர்ந்த மதியால் பேச்சு மூச்சடக்கி கொண்டுள்ளே
ஆழ்ந்தறிய வேண்டும் அறி"

(உள்ளது நாற்பது 28)

சேக்கிழார் பாடலில் நாம் கண்ட ஞான நிலை அனைத்தையுமே அடையும் வழியை இப்பாடல் கூறுகிறது. தண்ணீரில் விழுந்த ஒரு பொருளைக் கண்டெடுக்கும் பொருட்டு ஒருவன் அந்த நீரில் பேச்சு மூச்சு அடக்கிக் கொண்டு முழுகுதல் போல 'நான்' என்னும் எழும்பும் அகந்தை எங்கிருந்து எழுகின்றதோ அந்த மூலஸ்தானத்தை எண்ணங்களாகிய பேச்சையும் மூச்சையும் அடக்கிக் கொண்டு தன் உணர்வுஸ்தானமாகிய இதயத்தில் ஆழ்ந்து கூர்மையான ஒருமித்த அறிவினால் அந்த ஆத்மாவை அறிவாயாக என்று வழிகாட்டுகிறார் பகவான்.

மிகப் பெரிய சாகரத்தில் கரையும் மிகச் சிறிய சர்க்கரை தனது தனித் தன்மையான இனிப்பை இழந்து கடல் நீரின் சுவையையே பெறுகிறது. அதுபோன்றே, பரத்தில் கரையும் ஜீவன் தனித் தன்மையை இழந்து பரமாகவே ஆகிறது. இதுவே இறைவனின் பெருங்கருணை.

தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில் என்று சேக்கிழார் குறிப்பிடுவது இந்நிலையையே பகவானும் விவரிக்கிறார்.

"ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி
ஒருதனது அபிமுகமாக
ஈர்த்ததைத் தன்போல் அசலமாச் செய்துஅவ்
இன்னுயிர் பலிகொளும் இஃதே"

(அருணாசல பதிகம் 10)

இந்த அருணாசலத்தை ஒரே ஒரு தரம் ஆழ்மனதில் நினைத்தால் கூடப் போதும், அந்த ஜீவனின் மனச் சலனங்களின் சேட்டையை அடக்கி ஒப்பற்ற தன் பிரபாவத்தினால் ஈர்த்து, அந்த ஜீவனைத் தன் போலவே சலனமற்ற பரமாத்ம ஸ்வரூபமாகவே செய்து அந்த ஜீவனைத் தன்னுள் கரையும்படி அப்படியே விழுங்கி விடுகிறதே! என்று வியக்கிறார் பகவான்.

நாம் ஆரம்பத்தில் கண்டபடி அறியாமை நீங்கினால் அச்சமும் நீங்கும். அறியாமை இருள் ஆன்ம ஒளியில் தான் நீங்கும். அந்த ஆன்ம ஜோதியை ஏற்றுபவர் பகவான்.

"ஆன்ம ஒளிக்கடலில் மூழ்கித் திளைப்பவருக்கு
அச்சம் உண்டோடா? - மனமே!
தேன் மடை இங்கு திறந்தது கண்டு
தேக்கித் திரிவமடா"

என்று பாரதி அச்சம் நீங்கிய ஆனந்தக் களிப்பில் பாடுகிறார்.

ஒவ்வொரு பிறவியிலும் அழிகின்ற உடலை 'நான்' என்று குழம்பி விடுவதால் அச்சம் ஏற்படுகின்றது என்பதைப் புரிந்து கொண்டு நான் யார்? சாட்சியாய் இருந்து கொண்டு வார்ப்பது எது? அழிந்து போன ஒவ்வொரு பிறவியிலும் ஆறாது தொடர்ந்து வரும் உள்ளுணர்வே நான். அலைகட்கு அழிவுண்டு, கடலுக்கு அழிவு இல்லை. அலை தனது உந்து சக்தி குறைந்து அடங்கியவுடன் தனது தனித் தன்மையை இழந்து விடுகிறது. கடலோ எதையும் இழப்பது இல்லை. எனவே அழிவதும் இல்லை.

ஆணவம் தலையெடுக்கும் போதெல்லாம் இறைமை அகலுகிறது. ராஜராஜசோழன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி முடித்தவுடன் தாம் எவ்வளவு பெரிய ஆலயத்தினை நிர்மாணித்து விட்டோம். இறைவன் தங்கவே நிழல் கொடுத்து

*உள்ளோம் என்ற அகந்தையில் இருந்தான். அன்று இரவில் ராஜராஜன் கனவில் இறைவன் தோன்றி, "அரசனே! நான் ஓர் ஏழைக் கிழவி தந்த நிழலில்தான் உள்ளேன். உன்னுடைய நிழலில் அல்ல!" என்று கூறி மறைந்தான் மிகவும் வியந்துபோன அரசன் காலையில் கோயிலுக்குப் போய் தலைமை ஸ்பதியிடம் இதுபற்றிக் கேட்டான். மிகவும் வியந்து போன ஸ்தபதி "அரசனே! இங்கு நானும் மற்ற சிற்பிகளும் வெளியில் சிற்ப வேலைகள் செய்து களைத்திருக்கும்போது, ஓர் ஏழைக் கிழவி தினமும் வந்து ஒரு பலகைக் கல்லில் அமர்ந்து கொண்டு அனைவருக்கும் மோர் வழங்குவார். பல நாட்கள் இது நடந்து வந்தது. கோயில் கோபுர வேலை முடியும் தருவாயில் 'பாட்டி! ஒரு பலனையும் எதிர்பாராமல், பொருள் வசதி அற்ற நிலையில் தினமும் வந்து எங்களுக்கு மோர் தந்து கொண்டிருக்கிறீர்களே! உங்களுக்கு பிரதி உபகாரமாக, எமது நன்றியினை வெளிப்படுத்த ஏதேனும் நினைவுப் பரிசு தருகிறோம்' என்று கூறினேன். அந்தக் கிழவியோ 'இது இறைவனடியார்க்கு நான் செய்யும் தொண்டு. இதற்குப் பதிலாக நான் எதுவுமே எதிர்பார்க்கவில்லை' என்று கூறிவிட்டாள் எனினும் நன்றி மறவாத நாங்களே அதுநாள் வரை அந்தக் கிழவி அமர்ந்து எங்களுக்கு மோர் வழங்கிய அந்தப் பலகைக் கல்லை எடுத்து வந்து அதனைச் செதுக்கித்தான் ஆலயத்தின் தலைமைப் பகுதியைச் செய்தோம். அதன் கீழேதான் கர்ப்பகிரஹம் உள்ளது. அதைத்தான் சிவபிரான் தங்களிடம் கூறி உள்ளார்" என்றார். அத்துடன் தன் அகந்தை அழிந்த அரசன் பெரும் சிவ பக்தனாகப் பரிணமித்தான்.*

*இங்ஙனம் பரிபூர்ண சரணாகதியுடன் தன் முனைப்பினை அறவே அழித்து அனைத்தும் உன் செயலே! இனி நான் செய்வது ஒன்றுமே இல்லை என்பதை பகவான் விளக்குகிறார்.*

*“அண்ணாமலையாய் அடியேனை*
*ஆண்ட அன்றே ஆவி உடல்*
*கொண்டாய் எனக்கோர் குறையுண்டோ*
*குறையும் குணமும் நீயல்லால்*
*எண்ணேன் இவற்றை என்னுயிரே*
*எண்ண எதுவோ அதுசெய்வாய்*
*கண்ணே உன்றன் கழலினையில்*
*காதல் பெருக்கே தருவாயே”*

*(நவமாணிமாலை பாடல் 7)*

பொருள்: என்னுடைய குறை குணங்கள் அனைத்துமே நீதான். என்னை உனக்கே முற்றுமாக ஒப்படைத்து விட்டேன். உனக்கு எது விருப்பமோ அதையே நீ எனக்குச் செய்து அருள்வாய் என்கிறார் பகவான்.

*“சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்றவுன்னைத்*
*தந்தவுனக் கென்னையும்நான் தந்தேன் பராபரமே”*

*(பராபரக் கண்ணி 329)*

*“தன்னது என்று சாற்றுவனவெல்லாம்*
*நின்னது என்தனை நின்னிடத்தே தந்தேன்”*

என்று தாயுமானவர் பாடுவதும் இதையே. ஆத்ம சாட்சாத்காரம் அடைந்த பின் தன் நிலையைத் தாயுமானவர்

*“நடக்கினும் ஓடினும் நிற்கினும் வேறொரு நாட்டமின்றிக்*
*கிடக்கினுஞ் செவ்வி திருக்கினும் நல்லருட் கேள்வியிலே*
*தொடக்கும்என் நெஞ்சம் மனமற்ற பூரணத் தொட்டிக்குளே*
*முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே”*

*(தாயுமானவர் பாயப்புலி, பாடல் 12)*

சச்சிதானந்த அடியார் அடைவதற்கு சத்குருவே பொறுப் பேற்கிறான் என்பதைத் தாயுமானவர் ஓர் அழகிய உவமையில் குறிப்பிடுகிறார். (ஆனந்த பரம் 7) இங்கே ஆணவம் மிகுந்த நெஞ்சத்தை இருண்ட காடாக உருவகிக்கிறார். சத்குருவின் அருளால் சாதகனை இந்தக் கர்மக் காட்டினை வேறறக் களைந்து

சமவெளி ஆக்குகிறான். தரையின் கீழே கிடக்கும் அகங்காரம் என்னும் கல்லினைப் பிளந்து எறிகிறான். இதன் பிறகு இந்த வெளியைத் திருத்தி மௌனம் என்னும் விதியினை விதைக்கிறான். அது பயிராகும் வரை மயக்கத்தை விளைவிக்கும் மாயை ஆசைகள் ஆகிய பறவைகள் அணுகாத வண்ணம் பாதுகாக்கிறான். இந்த ஆன்மிக வேளாண்மையில் இறுதியில் விளையும் சிவ போதத்தை உண்டு மகிழ்கிறான். இத்தகைய வேளாண்மை சாதகன் செய்வதற்கு வழிகாட்டுபவன் சத்குரு என்கிறார் தாயுமானவர்.

பகவானின் அருள் இருக்கும்போது அதை நாம் நாடிப் பெறும்போது கர்ம வினைகள் அனைத்தும் மறைகின்றன.

"காகமானவை ஒரு கோடி கூடி நின்றாலும் ஒரு
கல்லின் முன் எதிர் நிற்குமோ !
கர்மமானவை கோடி முன்னே செய்தாலும் நின்
கருணைப் பிரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ"

(எங்கும் நிறைகின்ற பொருள் 6)

உண்மையைக் கூறுமிடத்து ஆன்மாவை உணர்ந்த மெய்ஞ் ஞானிகள் வேறு. அந்த ஞான சாஸ்திரங்களைப் புத்தியால் கற்றுத் தேர்ந்த கலைஞர்கள் (தத்துவ அறிஞர்கள்) வேறு. அஞ்ஞான பந்தம் நீங்கி முக்தி பெற விரும்பும் சாதகர்கள் (மேலே கூறப்பட்ட இரண்டாம் வகை) அறிஞர்களை நீக்கி, மேலான ஆத்ம ஞழனிகளிடமே அணுகி ஞானம் பெற வேண்டும் என்பதே இதன் பொருள்.

மெய்யான சீடனம், சத்குருவும் வேறல்ல என்கிறார் பகவான்.

"பரத்துமா மோனப் பதவொளியில் யான்அற்று
உருத்தபர பத்திஉணர்வு ஊற்றாம் - கருத்தின்

திரத்துவமாம் உத்தமசச் சீடத் துவமே
குருத்துவமாக் கொள்க குறித்து"

குருவாசகக் கோவை பாடல் 269

பொருள்: நான் என்னும் அகந்தை அற்று பரநிலையாகிய மோனப் பெரு வெளியில் ஊன்றிப் பதிந்த பரபக்தி உணர்வில் அறிவு நிலைப் படுவதே உத்தமமான சீடத்துவம். இந்த உத்தம சத் சீடத்துவம் யாரிடம் உள்ளதோ அவரே சரியான சத்குருத்துவமும் உடையவர் என அறியலாம் என்பதே இதன் பொருள்.

"அடைந்தவர்க்குப் பின்னுஒன்றை ஆணை இடுவோன்
அடைந்தகொடுங் கூற்று விதியாவான் - அடைந்தவரைச்
செய்வன செய்து முடித்தோராத் தீர்ப்போனே
தெய்வ அருள்குருவாத் தேர்"

குருவாசகக் கோவை 271

பொருள்: தன்னிடம் வந்து அடைந்தோரை (இன்னின்ன சாதனைகள் செய்யுங்கள் என்று) மேலும் எதையாவது செய்யக் கட்டளையிட்டுக் கொண்டே இருப்பவன் அவர்களை அழிக்க வந்த யமன் ஆவான். அது மட்டும் அன்றி அவர்களை மீண்டும் பிறவியினை எடுக்கச் செய்யும் பிரம்மாவும் ஆவான். அவ்வாறின்றி தம்மிடம் வந்தவர்களை நீ உண்மையில் செயல் கடந்த ஆத்மாவே என்று எடுத்துக் காட்டி உணர்த்தி (அதனால் சும்மா இரு என்று) அறிவுறுத்துவோனே தெய்வீகத் தன்மை வாய்ந்த உத்தம சத்குரு ஆவன் என்று தெளிந்து கொள்.

உலக இன்பங்கள், உலகத் தொடர்புகள் அனைத்துமே அற்பமானவை. உண்மையான ஆன்ம விழிப்பு ஒன்றே உண்மையான இன்பம்.

'நால்பே சுகமஸ்தி யோவை பூமா தத் சுகம்' என வேதம் கூறுகிறது. இதே கருத்தை பகவானும் அறுதியிட்டுக் கூறுகிறார்.

*"எந்நிலையில் ஒன்றை எதிரிட்டுக் காண்பதிலை*
*எந்நிலையில் ஒன்றை எதிரிட்டுக் கேட்பதிலை*
*எந்நிலையில் ஒன்றை எதிரிட்டு அறிவதிலை*
*அந்நிலையே பூமா அறி"*

*குருவாசகக் கோவை 1005*

பொருள்: எந்நிலையில் நமக்கு அன்னியமாக மற்றெதுவும் உணரப் படுவதில்லையோ, எந்நிலையில் நமது இருப்பு உணர்வு (பிரக்ஞை) எந்தச் சார்பும் அற்று தனித்து விளங்குகிறதோ அதுவே மெய்ந்நிலை-பூமா என்று வேதம் குறிபிடுவது இதுவே. இதுவே உண்மையான விழிப்பு உணர்வு.

இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் என்று நம்மை கோவை நாச்சியார் அடையச் சொல்வது இவ்விழிப்பு நிலையே.

*"தன்னை மறந்து தனுவேதான் என்றுஎண்ணி*
*எண்ணில் பிறவி எடுத்து இறுதி - தன்னை*
*உணர்ந்து தானாதல் உலகச் சம்சாரக்*
*கனவில் விழித்தலே காண்"*

*(ஏகான்ம பஞ்சகம் 1)*

என்று பகவானால் விளக்கப்படுவது. இதுவே நாம் நமக்குச் செய்யும் உதவி. இதுவே நாம் இறைவனுக்குச் செய்யும் சேவை. இதுவே மார்கழி வைகறை விழிப்பு.

*"பந்த வீடற்ற பரசுகம் உற்றவாறு*
*இந்த நிலை நிற்றல் உந்தீபற*
*இறைபணி நிற்றலாம் உந்தீபற"*

*(உபதேச உந்தியார் 29)*

இதுவே நமது தலைச்சுழி மாற்ற வந்த திருச்சுழி அண்ணல் கட்டளை. இதைப் பின்பற்றுவோமாக!

பகவான் பணியில் தங்கள்,

**எஸ். ராம்மோஹன்**

# உபநிஷத் கூறும் கேள்வி யோகம்

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

குழந்தையின் சிரிப்பு, ஸ்ரீ கிருஷ்ணரின் பிருந்தாவன லீலை, சித்தன் போக்கு, மரணத்தின் அவசியம், பகவான் ரமணரின் மௌனம் இவைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், மனமானது ஆழம் கண்டிருக்க வேண்டும். ஆழம் கண்டிருத்தல் என்றால் மனமானது விருப்பு, வெறுப்புகள் அற்றிருக்க வேண்டும். சாந்தமாக இருக்க வேண்டும்.

ஒருவர் ஒரு வார்த்தையைக் கூறுகிறார். அந்த வார்த்தையானது எப்படிப் பொருள் படுத்தப் படுகிறது என்பது கேட்பவரின் மனப் பக்குவத்தைப் பொறுத்தது. அதேபோல ஒருவருடைய மௌனமும் கூட மனப்பக்குவத்தை வைத்தே அர்த்தம் கொள்ளப் படுகிறது. ஆகவே 'சிந்தனா ப்ரகாரம்' அதாவது எப்படி சிந்திக்க வேண்டும், எப்படிப் பொருள் படுத்த வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சாஸ்திரங்கள் பேசுகின்றன.

இந்த அகில பிரபஞ்சத்தை 'ஓம்' என்ற ஒரு ஸப்தத்திற்குள் சாஸ்திரம் அடக்கிவிடுகிறது. பிறகு இந்த ஸப்தத்திற்கு ஆதாரமான அஸப்த ஸ்வரூபமான மௌனத்தை 'பிரம்மம்' என்று புரிந்துகொள் என்றும் கூறுகிறது.

*ஓமித்யேதத$_3$க்ஷரமித$_3$ம்ஸர்வம் தஸ்யோபவ்யாக்$_2$யானம் பூதம்*
*ப$_4$வத்$_3$ப$_4$விஷ்யதிதி ஸர்வமோங்கார ஏவ !*
*யச்சாந்யத் த்ரிகாலாதீதம் ததப்யோங்கார ஏவ !!*

என்று மாண்டூக்ய உபநிஷத் கூறுகிறது. இதன் பொருள்:

"ஓம் என்ற இந்த எழுத்து இவை அனைத்துமாக உள்ளது. ஓங்காரத்தின் முழுமையான, தெளிவான விளக்கம் இப்பொழுது ஆரம்பிக்கப்படுகிறது. கடந்தது, இருப்பது, வரப்போவது ஆகிய அனைத்தும் ஓங்காரம்தான். எந்த ஒன்று மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ அதுவும் ஓங்காரமே".

"ஜகத் விசாரணேன பிரம்ம பிராப்த்தி:" என்பது ஒரு நியாயம். அதாவது ஜகத் விசாரத்தினால் அதற்கு ஆதாரமான பிரம்மத்தை அடையலாம் என்பது இதனுடைய பொருள். கயிறானது பாம்பாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. பாம்பை விசாரித்தால் கயிற்றை அடையலாம் என்பது ஒரு நியாயம். விசாரித்தல் என்றால் அதனுடைய 'இருப்பை' [The existence] ஆராய்தலாகும். இது எங்கிருந்து வந்தது, எதனால் காக்கப்படுகிறது, எங்கு, என்று ஒடுங்கும் என ஆராய்வதுதான் விசாரம். ஆக அதன் அடிப்படையில் ஜகத்தை விசாரித்தால் அந்த விசாரமானது நம்மை பிரம்மத்திற்குள் தள்ளிவிடும். இந்த ஜகத் விசாரத்தில் நம்முடைய உடலையும், மனதையும் சேர்த்து விசாரிக்க வேண்டும்.

ஆனால் மாண்டூக்ய உபநிஷத் இந்த இடத்தில் வேறுவிதமாகப் பேசுகிறது. அதாவது, ஜகத்தை விசாரிக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக ஓங்காரத்தை விசாரிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஜகத் விசாரமும், ஓங்கார விசாரமும் ஒன்று என்று கூறுகிறது. ஜகத்தை விசாரித்தால் பிரம்மத்தை அடையலாம் என்று கூறுவதற்குப் பதிலாக, ஓங்காரத்தை விசாரித்தால் பிரம்மத்தை அடையலாம் என்று மாண்டூக்யம் கூறுகிறது.

பகவான் ரமணர் சந்நிதியிலும் இதுபோல் நடப்பதுண்டு. "கடவுள் என்றால் யார்? அவர் எங்கே, எப்படியிருக்கிறார்" என்று வினவும் ஆத்ம சாதகர்களிடம் பகவானின் பதிலளிப்பு கடவுளைப்

பற்றியதாய் இல்லாமல் வேறுவிதமாக இருக்கும். கடவுள் யார் என்று அறிவதற்குமுன் இந்த சம்சயம் யாருக்கு? சம்சயம் எனக்கு என்றால் சந்தேஹிக்கும் நான் யார், நான் எங்கே, எவ்விதம் இருக்கிறேன் என்று தெரிந்து கொள்ளலாமே என்ற கோணத்தில் பகவான் ரமணரின் பதிலளிப்பு இருக்கும்.

பகவானின் பதிலளிப்பை சற்று விரிவுபடுத்திப் பார்க்கலாம். இந்தப் பிரபஞ்சத்தை சாஸ்திரம் இரண்டு கோணத்தில் பார்க்கிறது.

அவைகள்:

1) பத பிரபஞ்சம் (சொல் உலகம்)

2) பதார்த்த பிரபஞ்சம் (பொருள் உலகம்)

இந்த உலகத்தில் எத்தனை பதார்த்தங்கள் (பொருட்கள்) இருக்கின்றனவோ அத்தனை பதங்கள் (பெயர்கள்) இருக்கின்றன. ஒரு பதார்த்தம் (a thing) வந்தால் ஒரு பதமும் (a name) வந்து விடுகிறது. சில வருடங்களுக்கு முன்னால் அலைபேசி (The mobile phone) என்ற பொருள் இல்லை. ஆகவே 'அலைபேசி' என்ற பெயரும் இல்லை. குழந்தை பிறந்தவுடன் பெயர் வைப்பதுபோல பொருள் வந்தவுடன் அதற்குரிய பெயரும் வந்துவிடுகிறது.

இந்தக் கருத்தினையே அண்ணாமலையானை வாழ்த்தி மணிவாசகர் திருவெம்பாவை பாடும்போது கூறுகிறார்.

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே

சொற்களினால் சுட்டிக் காட்டப்படும் சப்தம் பிரபஞ்சம் அண்ணாமலையானின் பாதங்களில் அனைத்தையும் தாண்டி உள்ள பாதக் கமலங்களில் ஒடுங்குகிறது. அதேபோன்ற பௌதிகப் பொருட்களினால் உருவான அந்தப் பிரபஞ்சமும் வானம் அனைத்தையும்

கடந்த அவனது கொன்றை மலர் சூடிய திருமுடியில் ஒடுங்குகிறது.

இங்கு ஒரு முக்கியமான கருத்தை உபநிஷத் கூறுகிறது:

"கார்ய திருஷ்டியா பத பதார்த்த ஐக்யம்" - "காரியம் (படைக்கப்பட்டது) என்ற அடிப்படையில் பதமும் (பெயரும்), பதார்த்தமும் (பொருளும்) ஒன்று". அதாவது ஒரு பொருளை, 'காரியம்' (The product or the effect) அதாவது 'படைக்கப்பட்டது' என்று நிரூபித்துவிட்டால் அந்தப் பொருளுக்கும் (பதார்த்தத்திற்கும்), அந்தப் பொருளுக்குரிய பெயருக்கும் (பதத்திற்கும்) இடையே எந்த வேறுபாடும் இல்லை. இரண்டும் ஒன்று என்பது சாஸ்திரத்தின் கருத்து.

ஒரு பொருளைத் தத்துவரீதியாக 'கார்யம்' (படைக்கப்பட்டது) என்று நிரூபித்துவிட்டால் அது வெறும் ஸப்தம் மட்டுமே. அங்கு 'பொருள்' என்ற ஒன்று உண்மையில் இல்லை. பதமும், பதார்த்தமும் வேறல்ல. இரண்டும் ஒன்று என்பது அறிவுபூர்வமாக நிலைநாட்டப்படுகிறது. சரி, இப்படி நிலை நாட்டுவதால் ஜீவனுடைய ஸம்ஸார அவஸ்தையானது எப்படி நீங்கும் என்பது கேள்வி. இதுபோன்ற அறிவாராய்ச்சியால் ஸம்ஸாரத்துயரமானது இன்னும் அதிகமாவதுதான் பலனா என்ற ஐயம் எழலாம்.

பகவான் ரமணரின் 'உள்ளது நாற்பது' என்னும் நூலிலிருந்து ஒரு செய்யுளை மட்டும் எடுத்து இங்கு உசாவிப் பார்ப்போம் (ஆராய்ந்து பார்ப்போம்).

எப்பெயர்இட்டு எவ்வுருவில் ஏத்தினும்ஆர் பேர்உருவில்
அப்பொருளைக் காண்வழி அதுஆயினும்அம் - மெய்ப்பொருளின்
உண்மையில் தன் உண்மையினை ஓர்ந்து ஒடுங்கி ஒன்றுதலே
உண்மையில் காணல் உணர்.

இதனுடைய பொருள்:

“யார் எந்தப் பெயரிட்டு எந்த ரூபத்தில் தியானித்து வழிபட்டாலும் அது நாமரூப பேதங்கள் இல்லாத பரவஸ்துவைக் காண்பதற்குரிய மார்க்கமே ஆகும். ஆனால் தன்னுடைய ஸ்வரூபத்தில் நிஷ்டைகூடி ‘நான்’ என்ற பிளவை ஸத்யமாகிய ஆத்ம வஸ்துவில் ஒடுக்கி அதுவாய் இருத்தலே உண்மையான ஸாக்ஷாத்காரம் என்று அறி”.

நான் என்ற பிளவை ஸத்யமாகிய ஆத்மவஸ்துவில் ஒடுக்கி அதுவாய் இருத்தலே உண்மையான ஸாக்ஷாத்காரம் என்று பகவான் கூறுகிறார். அஹங்காரத்தை ‘பிளவு’ என்று கூறுகிறார். இந்த பிளவை ஆத்ம வஸ்துவில் ஒடுக்க வேண்டும் என்று கூறிகிறார். ‘பிரவிலாபனம்’ அதாவது ஒடுக்கிப் புரிந்து கொள்ளுதல் என்பதை உபநிஷத்துகள் வலியுறுத்துகின்றன.

ஒரு கிலோ தங்கம் இருக்கிறது. அதிலிருந்து ஐம்பது வகையான ஆபரணங்கள் செய்யப்படுகின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். ஒரு கிலோ தங்கம் மட்டுமே இருக்கும்பொழுது ஒரே ஒரு சொல் மட்டும் இருந்தது. அதாவது ‘தங்கம்’ (the gold) என்ற ஒரு சொல் மட்டும் இருந்தது. பிறகு அந்தத் தங்கத்திலிருந்து ஐம்பது விதமான ஆபரணங்கள் உருவாக்கப்பட்டதும் ஐம்பது விதமான பெயர்கள் வந்துவிட்டன. ஐம்பது வார்த்தைகளுக்குரிய ஐம்பது பொருட்கள் இங்கே இருக்கின்றனவா என்றால் அப்படியில்லை. அங்கு இருப்பது தங்கம் என்ற ஒரு பொருள் மட்டும்தான். ஒரு கிலோ தங்கத்துடன் ஐம்பது விதமான உருவங்களைக் கொடுத்தவுடன் ஐம்பதுவிதமான பெயர்கள் முளைத்துள்ளன. ‘தங்கம்’ என்ற காரணத்துடன் நாமரூபங்கள் சேர்ந்து காரியங்களாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. காரணத்தை மறந்து

வெறும் கார்யங்களில் மட்டும் நம்முடைய 'கவனம்' செலுத்தப்படும்பொழுது பிளவு, சச்சரவு, துயரங்கள் எழுகின்றன. மாறாக கார்யங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே, அவைகளைக் கையாளும் பொழுதே, கவனத்தை காரணத்தில் மட்டும் நிலை நிறுத்தியிருந்தால் அங்கே பிளவு, சச்சரவு, துயரங்கள் எழுவதில்லை.

இதனையே பகவானும்

*.... .... தன்னை விடுத்துத் தனுவேது — தன்னைத்*
*தனுவென்பா னஞ்ஞானி தானாகக் கொள்வான்*
*றனையறிந்த ஞானி தரி (ஏகான்ம பஞ்சகம் 4)*

உலகத்தை 'கார்யம்' (படைக்கப்பட்டது) என்றும், பரம்பொருளை 'காரணம்' (மூலவஸ்து) என்றும் சாஸ்திரம் கூறுகிறது. காரணமான பிரம்மத்திடம் மாயையான நாமரூபங்கள் சேர்க்கப்பட்டு கார்யமான பிரபஞ்சமானது நம்மால் அனுபவிக்கப்படுகிறது. அந்த அனுபவம் முற்றிலும் சுகமாக இருந்தால் எந்தக் கேள்வியுமில்லை. பேசாமல் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்போம். ஆனால் சுகத்தோடு சேர்ந்து துக்கமும் அனுபவிக்கப்படுகிறது. சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிடும்பொழுது சிறிது கல்லும் மண்ணும் வெல்லத்துடன் சேர்ந்து வந்து விடுவது போல உலக வாழ்வில் இன்பமும், துன்பமும் கலந்தே அனுபவிக்கப்படுகின்றன. இந்த உடல், மனம், புத்தி மற்றும் இந்தப் பிரபஞ்சம் அனைத்தும் நமக்குத் துன்பத்தைத் தரக்கூடாது என்றால் அவற்றைக் 'கார்யம்' என்ற நிலையிலிருந்து காரணமான பிரம்மம், என்ற நிலையோடு ஒடுக்கப்பார்க்க வேண்டும். காரணமான பிரம்மத்திடம் வெவ்வேறு விதமான ரூபங்கள் சேர்ந்ததும் கார்யமான வெவ்வேறு ஸப்தங்கள் எழுந்துள்ளன என்று புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, பிரபஞ்சம் என்பது வெறும் ஸப்தம்தான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

பொதுவாக ஸப்தங்கள் அனைத்தையும் ‘ஓம்’ என்ற ஸப்தத்தில் அடக்கிவிடலாம். எப்படியென்றால், சாதாரணமாக எம்முயற்சியுமின்றி வாயைத் திறந்து ஒலி எழுப்பினால் வரும் ஸப்தம் ‘அ’. பிறகு நாக்கை மடக்கி, உதட்டைச் சுருக்கி எழுப்பப்படும் விதவிதமான ஒலிகளை ‘உ’ என்ற ஸப்தத்தில் அடக்கலாம். பிறகு இயல்பாக வாயை மூடினால் முடியும் ஸப்தமே ‘ம்’. ஆக அ+உ+ம் = ஓம். ஆகவே கார்யமான இந்தப் பிரபஞ்சத்தை சாஸ்த்ரம் ‘ஓம்’ என்று கூறுகிறது.

ஆக, ஸப்தத்தை பிரதானமாகக் கொண்டு ரூபத்தையெல்லாம் சப்தத்திற்குள் ஒடுக்கி, ஸப்தம்தான் பிரபஞ்சம் என்று அறிந்து அதற்கு ஆதாரமான அஸப்தமான பிரம்மத்தை உணர்ந்து கொள்ளலாம். அதேபோல ரூபத்தை பிரதானமாகக் கொண்டு ஸப்தத்தையெல்லாம் ரூபத்தில் ஒடுக்கி வெறும் ரூபம்தான் பிரபஞ்சம் என்று அறிந்து, அதற்கு ஆதாரமான அரூபமான பிரம்மத்தை உணர்ந்து கொள்ளலாம்.

நாமம், ரூபம் (Name and Form) இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை ஒடுக்கினால் மற்றொன்று ஒடுங்கிவிடும் என்று சங்கரர் கூறுகிறார்.

ஒருசமயம் பகவான் ரமணரின் முன்னிலையில் ஸத்சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நான்கு வயதுள்ள ஒரு சிறுமி இந்த உலகில் டாக்டர் சையதுதான் எனக்கு அனைவரைக் காட்டிலும் நெருங்கிய நண்பர் என்று கூறினாள். அதற்கு மற்றவர்கள் அப்படியென்றால் பகவான் உனக்கு நண்பர் இல்லையா என்று கேட்டார்கள். அதற்கு அந்தச் சிறுமி “பகவான் இந்த உலகில் இல்லை” என்று கூறினாள். அந்தச் சிறுமியின் பேச்சைக் கேட்ட பகவான் கூறினார்: “ஒரு குழந்தையின் வாயிலிருந்து எத்தனை அறிவு செறிந்த சொல்லானது வெளிப்படுகிறது. பெரிய மனிதர்கள்கூட

இந்த வாக்கியத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. பகவான் இந்த உலகத்தில் இல்லை. மாறாக பகவான்தான் உலகமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறார் என்ற பொருள் இதில் மறைந்துள்ளது".

கார்யத்திலிருந்து காரணத்திற்கு 'கவனத்தை' பெயர்த்து வைக்க வேண்டும், கவன சக்தியானது 'காரணத்தில்' மட்டும் நன்கு பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். இதைத்தான் பகவான் ரமணர், **"உண்மையில் காணல் உணர்"** என்று கூறுகிறார். கார்யமான ஸப்தத்திலிருந்து காரணமான அஸப்த நிதர்சனமான தியானம் சுட்டிக்காட்டுகிறது.

## இனிவரும் திருநாட்கள் - 2016

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 15 | வெள்ளி | பொங்கல் |
| | 19 | செவ்வாய் | ரமண புராணம் அரங்கேற்றநாள் |
| | 23 | சனி | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 27 | சனி | சுந்தரம் ஐயர் தினம் |
| மார்ச் | 7 | திங்கள் | மஹா சிவராத்திரி |
| | 18 | வெள்ளி | ஸ்ரீ வித்யா ஹோமம் |
| ஏப்ரல் | 8 | வெள்ளி | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 14 | வியாழன் | தமிழ் வருடப் பிறப்பு |
| | 15 | வெள்ளி | ஸ்ரீராம நவமி |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்.



# அக்ஷர மணமாலை– ஒரு தத்துவக் கருவூலம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

பகுதி-2

மகாபாரதத்தில் வன பர்வத்தில் உள்ள 'யக்ஷப்ரஸ்னம்' என்ற பகுதி ஒரு அற்புதமான வேதாந்த உரையாடல் ஆகும். ஒரு குளக்கரையில், மற்ற நான்கு பாண்டவர்களும் மயங்கி இருக்க, யக்ஷன் கேட்கும் ஆழமான கேள்விகளுக்கு தருமன் அளிக்கும் விடைகளே இந்த உரையாடல். தர்மபுத்திரனின் உயர்ந்த அறிவானது, வேதாந்தத்தின் அடிப்படையில் வாழ்வின் பல்வேறு பிரச்சினைகளுக்கு மனதில் பதியும்படியான முறையில் விடையளிக்கிறது. இரண்டு கேள்விகளை மட்டும் இப்பொழுது பார்ப்போம்.

கேள்வி: புல்லினும் அற்பமானது எது?

பதில்: கவலை

கேள்வி: உலகின் மிகப் பெரிய ஆச்சரியம் என்ன?

பதில்: நம்மைச் சுற்றியுள்ள அனைவரும் மரணமடைவதைக் கண்டும், நாம் மட்டும் சாஸ்வதம் என்று நினைப்பது.

இந்த இரண்டு கேள்விகளுக்கும் என்ன தொடர்பு? இதற்கு விடை காண்போம்.

கவலை என்பது இன்றைய மக்களின் மிகப் பெரிய உணர்வு. இது இல்லாதவன் கிடையாது. இதுவே

துன்பத்தின் முக்கிய காரணம். இதன் காரணத்தை அறிந்தால் இதை நாம் நீக்க இயலும். நம் தத்துவங்கள் இதற்கு மூன்று ஆதாரங்களைக் காண்கின்றன. இவற்றை தாபத்ரயம் என்று அழைப்பார்கள். தாபம் என்றால் துயரம். த்ரயம் என்றால் மூன்று. ஆக, நம்முடைய துயர்கள் எல்லாம் மூன்று காரணங்களால் அமைகின்றன.

முதற் காரணம் இறைவன் திருவுள்ளம். நாம் எங்கு எந்த இடத்தில் எந்த பெற்றோர்க்கு சிசுவாகப் பிறக்க வேண்டும் என்பது முதல், நம்முடைய வாழ்க்கையின் பல நிகழ்வுகள், நம்மால் உணர இயலாத ஒரு சக்தியால் நிகழ்கிறது என்பது கண்கூடு. இதை 'விதி' 'தலையெழுத்து' என்ற பல பெயர்களால் அழைக்கிறோம். இதை அறிந்து அதற்கு ஏற்ப நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது விவேகம். கம்பன், ராமனின் கூற்றாக இதை அழகாகச் சொல்லுகிறான். 'நான் தந்தையின் ஆணைப்படி காட்டிற்குச் செல்கிறேன்' என்று இளவல் லக்ஷ்மணனிடம் மூத்தவன் கூற, ஆவேசத்துடன் அவன் 'அனைவரையும் அழிக்கிறேன். என் வில்லின் சக்தியை அவர்கள் காணட்டும்' என்கிறான். அவனை சமாதானப் படுத்தும் முறையில் உயர்ந்த ஒரு தத்துவத்தை ராமன் விளக்குவான்.

நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை அற்றே,
பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்,
மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த,
விதியின் பிழை இதற்கென்னை வெகுண்டது?

'புனல் இல்லாதது நதியின் தவறால் அல்ல. நான் காடு செல்ல வேண்டும் என்பதும் கைகேயியோ பரதனோ அல்லது நம் தந்தையோ செய்த பிழையால் அல்ல. அது விதி செய்த சதி. இதற்காக நீ சினமடையாதே'. என்று தத்துவ ரீதியாக சமாதானம் செய்கிறான். இது உலக மாந்தருக்கெல்லாம் கம்பன் அளிக்கும் உபதேசம்.

இவ்வாறு விதியின் காரணமாக வரும் துயர்கள் ஆதிதெய்வீகம் எனப்படும்.

இரண்டாவது காரணம், நம்முடைய சூழல் மற்றும் பௌதீக சக்திகளால் நேரிடும் துயர்கள். நம்முடைய தோல்விகள், அதனால் விளையும் கவலைகள் பலவற்றிற்கும் இதுவே காரணம் என்பது கண்கூடு. இதை ஆதிபௌதீகம் என்பர்.

கடைசியான துயரம், நம்முடைய உடல் மற்றும் உணர்வுகளால் ஏற்படக் கூடியவை. இது ஆத்யாத்மிகம் எனப்படும். நம்முடைய உள்ளத்தைத் தெளிவாக வைத்துக் கொண்டால், பலவித துயர்களை நாம் புறத்தே வைத்து அகத்தே பரம்பொருளைத் தேட இயலும். ஆகையால் தாபத்ரயம் என்ற மூன்றில் ஆத்யாத்மிகம் என்னும் துயரை நாம் கட்டுப்படுத்த முடியும்; ஆதிபௌதிகம் மற்றும் ஆதிதெய்வீகம், நமக்குப் புறம்பானவை. அவற்றின் தன்மையை உணர்ந்து நாம் நம் உள்ளத்தை தெளிவாக வைத்துக் கொள்ளவேண்டும்.

நாம் பல பிறவிகள் எடுத்து இளைத்தவர்கள். பலவிதத் துயர்களைக் காலம் காலமாக அனுபவிப்பவர்கள். இதை மாணிக்கவாசகர், 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய், மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய், மனிதராய்....எல்லப் பிறப்பும் பிறந்திளைத்தேன்' என்று இந்த ஆன்மா காலங்காலமாக அனுபவித்த துயரங்களை வெளிப்படுத்துகிறார்.

இத்தனை பிறவி எடுத்தாலும் இந்த உடல் நிலையற்றது. ஒருநாள் நிச்சயம் அழியக்கூடியது என்ற உணர்வு பலருக்கும் ஏற்படுவதில்லை. இதையே உலகின் மிகப் பெரிய அதிசயமாகக் காணுகிறான் தர்ம புத்திரனாகிய யுதிஷ்டிரன். இதில் மானுடப் பிறவி எடுத்தவர்கள் அதிருஷ்டசாலிகள். வினைப்பயனை உணர்ந்து துயரை நீக்கிப் பேரின்பப் பேராற்றில்

களிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள். ஆனால் இவர்கள் மிகச் சிலரே. பெரும்பாலோர் பிறவிப் பெருங்கடல் நீந்தத் தெரியாது இளைத்தவர்களே.

இந்த நிலையில் பிறவிப் பிணிக்கு வழி காட்டுகிறார் ரமண பகவான்.

சுகக் கடல் பொங்க சொல் உணர்வு அடங்க அங்கு
சும்மா பொருந்திடு அருணாசலா

என்ற அக்ஷர மணிமாலையின் வரிகள் நமக்கு ஒளி வீசும் பாதையில் அடியெடுத்து வைக்க உதவி புரிகின்றன. இருள் மிகுந்த இந்த லௌகீக வாழ்க்கையை விட்டு வெளியேற இந்திரியங்களை அடக்கி உள்ளத்தில் பேரின்ப சுகத்தை பெருக்கிக் கொள்ள, நமக்கு வைராக்கியம் தேவை. இதையே 'சும்மா பொருந்திடு' என்ற வரிகளில் பகவான் விளக்குகிறார்.

★★★

மனித சமுதாயத்தை ஒரு நிலையிலிருந்து அதனினும் மேம்பட்ட ஒரு நிலைக்குக் கொண்டு செல்வதே, சித்தாந்தங்களின் நோக்கம். வேதாந்த நூல்களில் அடிக்கடி சாந்தி பாடமாக வருகின்ற கீழ்க்கண்ட வரிகள் அனைவருக்கும் பரிச்சயமானவை

அசதோ மா சத் கமய
தமசோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய

இந்த சொற்களுக்கு விரிவான அளவிலே பொருள் காண்கின்றனர் சான்றோர்கள். இதன் பொதுவான விளக்கம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

அசத்திலுருந்து சன்மார்கத்திற்கும்; இருளிலிருந்து ஒளியை நோக்கியும்; மரணத்திலிருந்து அமிருத மயமான வாழ்விற்கும் அழைத்துச் செல்.

இந்த சாந்தி வசனத்தின் தாத்பரியம் என்ன? 'என்னை உபதேசத்தால் நல்வழிப்படுத்துங்கள். பொய்மையில்

இருந்து நான் விடுபட்டு உண்மை நிலையை அடைய வேண்டும்' என்பதே. இந்த உண்மை நிலை என்பது ஒளி மயமானது. அது அழிவற்றது. அங்கு துன்பம், மூப்பு, நோய் என்ற குறைபாடுகள் கிடையாது. அது அமரத்துவம்.

இந்த உயர்ந்த நிலையை அடையத் தடையாக நிற்பவை என்ன? ஏன் நம்மால் அதை சுலபமாக அடைய முடியவில்லை? 'ஆயிரத்தில் ஒருவனே சித்தியைப் பெருகிறான்' என்று கீதாசாரியனே சொல்கிறான் அல்லவா. இந்தத் தடையைத்தான் இந்தியத் தத்துவங்கள் 'அஞ்ஞானம்' என்று வருணிக்கின்றன. இது அறிதல் என்பதின் எதிர்மறையான நிலை. அறிய வேண்டிய ஒன்றை அறியாதிருத்தல் அஞ்ஞானமாகும். இது எதனால் ஏற்படுகிறது என்று தெரிந்தால், நாம் அதை நீக்க முயற்சி செய்யலாம். ஞானத்தைப் பெறலாம்.

மேற்கூறிய சாந்தி பாடத்தின் வரிகள் நமக்கு இதைத் தெளிவு படுத்துகின்றன. 'தமசோ மா ஜ்யோதிர் கமய' இருளிலிருந்து என்னை ஒளிக்கு அழைத்துச் செல் என்ற கருத்து கூர்ந்து அலச வேண்டியவையாகும். பிரகாசமான இடத்தில் எல்லாப் பொருள்களும் நமக்குப் புலனாகின்றன. அவற்றின் தன்மையை நாம் உணருகிறோம். அல்லது உணர்வதாக நினைக்கிறோம். இருளில் இது சாத்தியமில்லை. வஸ்துக்கள் நமக்குப் புலனாவதில்லை. நமக்கு பயம் ஏற்படுகிறது. அந்த இடத்தை விட்டு நீங்க முயலுகிறோம்.

இது இரண்டிற்கும் நடுவில் ஒரு நிலையும் உண்டு. அதாவது அரைகுறை வெளிச்சம் எனப்படும் நிலை. இன்னிலையில் பொருள்கள் தெளிவாகத் தெரிவதில்லை, தெரியாமலே போவதுமில்லை. நம்மில் பலர் இந்த இரண்டும் கெட்டான் நிலையில்தான் இருக்கிறோம். வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள்

தெளிவில்லாத நிலையில் நம் முன் காட்சி அளிக்கின்றன. சில விரும்பத் தக்கவையாகவும் வேறு சில விரும்பத் தகாதவையாகவும் காட்சி அளிக்கின்றன. இளமையில் இன்பமளித்த கேளிக்கைகள் முதுமையில் அர்த்தமற்றவையாகத் தோன்றுகின்றன. ஒருவருக்கு விருப்பமான இசையை வெறொருவர் விரும்புவதில்லை.

இதற்கெல்லாம் காரணம் நம்முடைய மனமே. இதைப் பல நிலைகளில் சான்றோர் வருணிக்கின்றனர். சித்தம், பிரக்ஞை போன்றவை மனத்தின் பல்வேறு மாறுபட்ட படிகள். சித்தாந்தங்களில் இதற்கு விரிவான விளக்கங்கள் உள்ளன. இதை சுலபமான ஒரு கதை விளக்குகிறது.

பாஞ்சால தேசத்தில் கஜகர்ணர் என்ற மகான் வாழ்ந்து வந்தார். பெரிய சித்தர் என்ற புகழ் பெற்றவர். பலர் அவரை அணுகி நற்கதி பெற்றனர். அவரிடம் ஒரு வணிகன் வந்தான். “ஐயா, வியாபாரத்தில் என் பங்காளிகள் என்னை ஏமாற்றி விட்டார்கள். சொத்தையெல்லாம் இழந்து விட்டேன். மனைவி மக்கள் கூட என்னை ஒதுக்குகின்றனர். என்னை ஏமாற்றியவர்களை, எனக்கு துரோகமிழைத்தவர்களை நான் பழி வாங்க வேண்டும்” நீங்கள்தான் உதவ வேண்டும். என்று மன்றடினான்.

மகானும் சற்று யோசித்துவிட்டு சொன்னார், “உன்னால் நான் சொல்லும் விரதத்தைக் கடைப்பிடிக்க முடியுமா?”

“செய்கிறேன். எதுவானாலும் செய்கிறேன். என் விரோதிகள் அழிய வேண்டும்”. என்றான்.

நான் இப்பொழுது உனக்கு ஆம்ர வித்தையைக் கற்பிக்கிறேன். அதை முறைப்படி செய்தால் உன் எதிரிகள் அழிவார்கள்.

வணிகனுக்கு மகிழ்ச்சி தாங்க வில்லை. கைகூப்பி அவர் வாக்கைக் கேட்டான். கஜகர்ணர் சொன்னார், "தினமும் இரவு படுக்கும் முன்னர், உன் எதிரிகளின் பெயர்களை தனித்தனியாக ஒவ்வொரு மாங்கனியில் எழுதி ரகசியமாக ஒரு மரப் பெட்டியில் போட வேண்டும். அந்தப் பெட்டியை உன் தலைமாட்டில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். அந்தக் கனிகள்தான் உன் எதிரிகளின் சத்துரு. ஆனால் இதை யாரிடமும் சொல்லக்கூடாது செய்வாயா?"

"அவர்கள் பெயர்களை தினமும் மாங்கனிகளில் எழுதிப் பாதுகாக்க வேண்டும். பிறகு வேறென்ன செய்ய வேண்டும் ஐயா?"

"இதை சரிவர செய்தால் போதும். வேறொன்றும் செய்ய வேண்டாம்".

சுலபமான வித்தையாக இருக்கிறதே என்று அவன் வியந்தான். அவர் பெரிய சித்தர் என்பதால் மறு பேச்சின்றி ஒப்புக்கொண்டான்.

சில நாட்கள் கழித்து, அவன் மறுபடியும் குருவிடம் வந்தான்.

"ஐயா, நீங்கள் சொன்ன வித்தையைக் கடந்த ஒரு மாதமாகச் செய்து வந்தேன். எதிரிகள் அழியவில்லை. ஆனால் வேறு விபரீதமான பலன்களை அனுபவித்து விட்டேன். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று முறையிட்டான்.

"என்னப்பா ஆயிற்று?" குரு கேட்டார்.

"மாங்கனிகள் பழங்களாகி அழுக ஆரம்பித்தன. துர்நாற்றம் வீசத் தொடங்கியது. அதனால் என் மனைவி வீட்டை விட்டு வெளியேறினாள். மற்றவர்களும் என்னை அண்டுவதில்லை. துர்நாற்றம் காரணமாக வியாபாரமும் படுத்து விட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. வழி காட்டுங்கள்". என்றான்.

குரு சிரித்தார். பின்னர் சொன்னார்,

"அப்பனே, அந்த மரப் பெட்டிதான் உன் உள்ளம். மாங்கனிகள் உன் எண்ணங்கள். அவற்றைக் காயாகவோ பழமாகவோ உரிய காலத்தில் நீ உண்டிருந்தால், அவை அழுகியிருக்காது. ஆனால் நீ அவற்றை மரப் பெட்டியில் பூட்டி வைத்தாய். அவை அழுகிப் போயின. அவை உன் வாழ்வை எப்படி பாதித்தது என்பதை நீயே இப்பொழுது உணர்கிறாய் அல்லவா?"

வணிகன் யோசித்தான்.

"குருவே, அந்த மாங்கனிகள்தான் என் வெறுப்புணர்வுகளா?"

"ஆமாம். உன் உள்ளே பூட்டி வைத்த அந்த உணர்வுகள், மனம் என்கிற பெட்டியை நாற அடித்து, வீடாகிய உன் வாழ்வை நாசமாக்கி, உன் தொழிலையும் முடக்கி இந்நிலைக்கு உன்னைக் கொண்டு வந்திருக்கின்றன. மனதையும் சொல்லையும் துர்நாற்றம் வீசாமல் பார்த்துக் கொள். உணர்வுகளை மாங்கனிகளாக உண்டுவிடு. மகிழ்ச்சி பெறுவாய். இல்லையென்றால்"

"புரிகிறது சுவாமி" இதுதான் 'ஆம்ர வித்தையா'?

"ஆமாம். ஆம்ரம் என்றால் மா மரம். இதுவே உனக்கு என் உபதேசம்".

அந்த வணிகன் சில மாதங்களுக்குப் பின் மகானிடம் வந்தான். அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான்.

"ஐயா, என் வாழ்க்கையில் இப்பொழுது சுகக் கடல் வீசுகிறது. எனக்கு எதிரிகள் யாரும் இல்லை. எல்லோரும் நண்பர்களாகவே தோன்றுகிறனர். அவர்கள் என்னைப் பழித்தாலும், போற்றினாலும் நான் மாங்கனிகளாக பாவித்து, அவற்றை உடனே உண்டு ஜீரணித்து விடுகிறேன். எந்தத் துயரும் என்னை அண்டுவதில்லை. ஆம்ர வித்தையைக் கற்றுத் தந்த தங்களுக்கு என் நன்றி".

இதுவே ரமணரின் கூற்று.

நம் உணர்வுகளே நம்மைச் சான்றோனாகவும் சாதாரணனாகவும் மாற்றுகின்றன. நம் சொற்களே நமக்கு நண்பர்களையும் பகைவர்களையும் அமைத்துக் கொடுக்கிறன. இதற்கு இறை அருளும் தேவை. அது நம்மை எப்பொழுதும் நமக்கே தெரியாமல் துணையாக நின்று காக்கின்றன. வாயினால் இறைவன் புகழ் பாடி மனதினால் அவனை சிந்திக்க, சொல்லும், உணர்வுகளும் பரமன் பாற்படுகின்றன. எல்லாப் பாவங்களும் நீங்கிய நிலையில் நாம் இறைவனை சுலபமாக அடைந்து விடுகின்றோம். இதைத்தான் ஆண்டாளும்,

*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதரவான் நின்றனவும்*
*தீயிலுள் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.*

என்று உரைக்கிறாள்.

சுகத்தை நாடாதவர் யாருமில்லை. அதற்கான வழியை, நம் சான்றோர்கள் பலர் வகுத்த பாதையிலேயே, நம்மைக் கட்டி அணைத்து அழைத்து செல்கிறார் பகவான். எளிய வார்த்தைகள், பொருளோ வேதாந்த சாரம். அந்த மணிமாலையை மறுமுறையும் பார்க்கலாமா!

*சுகக் கடல் பொங்க சொல் உணர்வு அடங்க அங்கு*
*சும்மா பொருந்திடு அருணாசலா*

---

## ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# ஹஸ்தாமலக கீதம்

## கிரேஸி மோகன்

*அருணா சலர்க்குப்பின், ஆதிசங் கரர்பின்*
*கருணா கரர்காம கோடி - உருவாய்*
*அரனா கவந்து அரணா கநின்றோய்*
*வரனாய்யென் வெண்பாவில் வா*

*ஆத்திலொரு கால்வைத்து ஆன்மப்போ ராட்டமாய்*
*சேத்திலொரு கால்வைத்த ஜீவனவன் - காத்திருக்கான்*
*காணா(து) ஒளிந்திடும், காணும் அனைத்திலும்*
*நானார் உணர்வை நினைத்து*

*முன்கதை சுருக்கம்*

*பித்தான, பேசாத பிள்ளைமுன் அத்வைத*
*சொத்தான சங்கரர்வி சாரிக்க , - அத்தா*
*மலகனவன் வாக்கில் மலர்ந்தது கீதம்;*
*உலககுரு கொண்டார் உவப்பு*

*ஆதிசங்கரர் கேள்வி*

*யார்நீ!, உனக்கிங்(கு) எவர்சொந்தம்!, போவதெங்கே!*
*பேரென்ன பிள்ளாய் பதிலெனக்கு, - கூறென்று*
*வித்தை வினவ , விருட்ஷமாய் எழுந்தது*
*அத்தா மலக அமுது* *(1)*

*அத்தாமலகர் பதில்*

*பால்வடியும் பிள்ளை பதிலாதி புங்கவர்க்கு,*
*நால்வர்ணம், யக்ஷசுர மேல்வர்ணம், - போல்எவரும்*
*நானல்ல, இல்லறமோ நைஷ்டிகமோ ஞானியோ*
*நானல்ல, நானுணர்வே நான்* *(2)*

*காரியமாய் பூமியைக் காத்திடும் காரண*
*சூரியன்போல், ஐம்பொறிக்கு சுத்தாத்ம - வீரியமே,*
*அன்னவரே நானதற்கு ஆகாயம் தானுவமை,*
*எண்ணவரு வோர்க்கு இருப்பு (அல்லது) எழுத்து*
*(அல்லது)*
*எண்ணவரு வோர்க்கது ஏய்ப்பு*
*எண்ணவரும் ஏகாந்த மே* *(3)*

*கனலும் கொதிப்புமாய் கட்டிக் கலந்தாற்போல்,*
*உணர்வுடன் ஆத்துமா ஒன்றி;- புணர்ந்திடும்,*
*சேதஅ சேதனங்கள் சார்ந்திருக்கும் அவ்வான்ம*
*நாதனே, என்றுமுள நான்* *(4)*

*ஆடியில் பிம்பமது ஆளுள்ள மட்டுமே*
*ஜோடியாய் சேர்ந்தாலும் ஜீவனவன், - நாடிக்*
*கிடப்ப(து) உணர்வின் கிளரொளியை நம்பி,*
*தொடர்ந்தொளிர்அவ் வான்மாநான் தான்* *(5)*

*முன்னாடி பார்த்த முகம்மட் டுமிருக்கும்*
*கண்ணாடி பிம்பங்கள் காட்சிப்பொய் - உன்னாடை*
*மேனி, தனித்தன்மை, மாயை அதுபோல*
*ஞானி உணர்வான்மன் ஞான்* *(6)*

*எண்ணும் மனதை இயக்கும் மனம்யார்!*
*கண்ணுக்குப் பின்னிருந்து காண்கின்ற - கண்ணன்யார்!*
*கண்மனம் காணாத கம்பீ ரவுணர்வாம்,*
*நன்மையா னந்தமே நான்* *(7)*

*கணக்கற்ற பிம்பம் குடநீரில், ஆனால்,*
*உனக்குற்ற சூரியனோ ஒன்று; - மனக்குற்றம்,*
*ஒன்றைப் பலவாய் உடைத்தல், உணர்விலே,*
*நின்றென்றும் நீங்காதோன் நான்* *(8)*

*அருக்கன் இருக்க அனைத்தும் தெரியும்,*
*கருக்கல் வருங்கால் காணா(து) - இருக்கும்காண்,*
*சூரியர்க்கும், கண்ணுக்கும் ஜோதி கொடுக்கும்நான்,*
*பேரியக்க ஆன்மவொளி பார் (9)*

*காட்சியொரே காலத்தில் காண்போர் அனைவர்க்கும்,*
*தீட்ஷண்ய மாக்கும் திவாகரனின் - மாட்சிமைபோல்,*
*பட்டுப் பலர்புத்தி பேரொளி வீசிடும்*
*நிட்டைப் பரபிருமம் நான் (10)*

*ஏகபிம்ப பானு எழுச்சியிலாத் தண்ணீரில்,*
*ஏகமாய் பிம்பங்கள் ஏற்றிடும் - வேகநீர்,*
*ஆசையின் வேகத்தில் அவ்வான்மா ஜீவன்கள்,*
*வாசனை நீங்கவொளி வீச்சு (11)*

*மார்த்தாண்டன் சூரியனை மேக அறியாமை*
*போர்த்தாண்டு கொள்ளும் படுபாவி, - தீர்த்தாண்ட*
*வர்க்கு ஒளியாய் வெளிவரும் ஆன்மனாய்*
*நிற்கும் நிரந்தரம் நான் (12)*

*யாதுமாய் நின்றாலும், ஏதும் அதைத்தொடாது,*
*ஆதவனே ஒட்டாத ஆகாசமாய், - ஈதுணர்ந்து,*
*எப்போதும் ஆன்மனாய் எங்கும் நிலைத்தபடி*
*நிற்போனே நிர்மல நான் (13)*

*செய்யும் முறையால் ஸ்படிக நிறம்மாறும்,*
*அய்யவுன் புத்தியும் அஃதேபோல், - பெய்யும்,*
*மதிபிம்பம் ஆடும் நதிநீரில், ஆன்மப்*
*ப்ரதிம்பம் உன்னாட்டம் போல் (14)*

*மங்களம்*

# ரிபுகீதை

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீ பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

*எதனிடையிற் றியானமெல்லாம் லயிப்பதாகு*
*மெதனிடையில் யோகமெலா மிறப்ப தாகு*
*மெதனிடையி லஞ்ஞான மாப்பதாகு*
*மெதனிடையில் ஞானமுமே நசிப்பதாகு*
*மெதனிடையில் விவகார மிலாத தாகு*
*மெதுதானே பரமார்த்த நிலைமை யாகு*
*மதுவகஇம்ன் றதிதிடமா நிச்ச யத்தா*
*லம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்.* **26/33**

*எதனிடையிற் கலந்திடுவோன் சுகமே சார்வ*
*னெதனிடையிற் கலந்திடுவோன் றுயரர் மேவா*
*னெதனிடையிற் கலந்திடுவோ னெவையுங் காணா*
*னெதனிடையிற் கலந்திடுவோம் பிறப்பே சாரா*
*னெதனிடையிற் கலந்திடுவோம் பிவே மேவா*
*னெதனிடையிற் கலந்திடுவோம் பரமே யாவ*
*னதுவகமென் றதிதிடமா நிச்ச யத்தா*
*லம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்.* **26/34**

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.57 - பதிப்.2004] ஸ்ரீ பக: தியானத்தைப் பற்றி வினவியதற்கு, நான், நான் என்று நாம் சொல்லும் இவ்வுடல் ஒருநாள் கட்டையாய்ச் செத்துபோய்ச் சாம்பலாகிறது. ஆகவே இவ்வுடல் நானல்ல. உடலை விட்டால் வேறென்ன மிச்சம்? மனம். மனத்தின் எண்ணங்கள் பற்பலவாயினும் நினைப்பவன் ஒருவனேயல்லவா? நினைப்பவன் யாரென்று ஏகாக்கிரமாய்க் கவனித்தால், அங்கே ஒரு நினைப்புமில்லை, நினைப்பவனும் இல்லை; நினைப்பற்ற போதம் தானே மிச்சம். தியானம், சமாதி எல்லாம் இதுவே. நான் சென்றவழி இதுவே. இதனால் தேகவாசனை ஒழிந்தே போகிறது. அகந்தை மறைகிறது, ஆத்மாவே சுடர்கிறது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.249 - பதிப்.2004] ஸ்ரீ பக: ஏதாவதொன்றில் மனத்தை நிலைநிறுத்தி அவ் அனுபவத்தின் மூலம் எதுவென்று பார்த்தால் மௌன நிலையில் உண்மை விளங்கும். அப்யாசம் இயல்பாகுங்கால் அது மௌனமாகவே முடியும். மன இயக்கமற்ற தியானமே மௌனமெனப்படும். மனமடங்கலே தியானம்.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.275 - பதிப்.2003] ஸ்ரீ பக: யாருக்கு வியோகம் என்று பார். அதுவே யோகம். யோகம் எல்லா மார்க்கங்களுக்கும் பொதுவானது. ஆன்மா அல்லது சத்தியத்திலிருந்து தான் மாறுபட்டதாக எண்ணுவதை அகற்றுவதே யோகம். வேறல்ல. நமக்கு அப்பாற்பட்டு எங்கேயோ அல்லது மாறுபட்டு உள்ள எதையோ போய்ச் சேருவது போன்ற எவ்வித கேள்விக்கும் இடமேயில்லை. ஏனெனில் நீ ஆன்மாவிலிருந்து தனியாக என்றும் இருக்கவுமில்லை; இருக்கவும் முடியாது.*

*[பகபவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.9 - பதிப். 2000] ஸ்ரீ பக: இருப்பிற்கும் இன்மைக்கும் சாக்ஷியாம்*

*ஒன்று என்றும் இருந்து கொண்டேயிருக்கிறது. அறிவும் அறியாமையும் மனத்தைப் பற்றியவை. இந்த துவந்த்வத்திற்கு அப்பாலுள்ளது ஆத்மா. அது தானே ஒளிர்வது. அதைக் காண வேறோர் ஒளி வேண்டுவதில்லை. அநாத்மா ஆத்மாவைக் காணமுடியாது. ஆத்மா இந்திரிய மனோ வியாபாரங் களைக் கடந்ததாய் தன்னந்தனியே கேவல ஞப்தி மாத்திரமாய்ப் பிரகாசித்துக் கொண்டுள்ளது. தன்னைத் தான் உணர்ந்தாலும் உணராவிடினும் ஆத்மா என்றும் ஒளிர்ந்து கொண்டேயுள்ளது. அநாத்மாவை ஆத்மாவாய் மயங்குவது நீங்கினால் நித்ய ஸித்தமாம் ஆத்மா அங்கே தானேதானாய் இங்கே இப்போதே ஒளிரும். அஞ்ஞான நீக்கமே ஆத்ம ஞான மெனப்படும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.17 - பதிப்.2000] ஸ்ரீ பக: உபத்திரவம் அனைத்தும் தேகான்ம பாவத்தாலேயே உண்டாகிறது. அதுவே அஞ்ஞானம். விசாரணையால் அது ஒழியும். தேகான்மபாவம் நீங்கினால் தானே தானாய் என்றுமுள்ள ஸஹஜான்ம நிலை தெளிவாய் விளங்கும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.71 - பதிப்.2000] ஸ்ரீ பக: பிற விஷய ஞானமற்ற அந்நிலையே தன்னிலை. அது ஆனந்தமயம். அது இப்போதும் எப்போதும் இருக்கிறது. அதுவே ஜாக்ரத் சுஷுப்தி (விழி துயில்) என்றும் முக்தியென்றும் சொல்லப்படும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.72 - பதிப்.2000] ஸ்ரீ பக: தூக்கத்தினின்று விழிப்புற்ற விருத்தி தேகாதி விஷயாகாரம் உறும் முன்னர் இலகுவது கேவல ஞப்தி - உணர்வு. அதைக் கூர்ந்து கவனித்து வந்தால் ஸ்வரூப நிலை தானே விளங்கும். தூக்கத்தின் அஞ்ஞான விருத்தியும் விழிப்பின் விஷயாகார ஞானமும் அற்ற தனது யதார்த்த ஞான நிலை அதுவே.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.39 - பதிப்.2000] ஸ்ரீ பக: தோன்றி மறையும் அகந்தையை முன்னிட்டெழும் ஞானம் வியாவஹாரகம். அதில் அறிவான் அறிபடு பொருளென்னும் துவைத பாவம் இருக்கிறது. ஞாபகம் என்பது அறிவான் அறிபடு பொருளென்னும் பேதத்தைப் பற்றி நிகழ்வதே. இவ் வேற்றுமையின்றி வியாவஹாரக ஞானமே இல்லை. ஸ்வரூப ப்ரக்ஞையோ பாரமார்த்திகம். அதில் அறிவான் அறிபடுபொருளெனும் பேதமில்லை; தானே தானாய் அது ஒளிர்கிறது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.105 - பதிப்.2004] ஆத்மாவாம் தனக்கு அன்னியமாய் மனமென்றொன்று இல்லையென்று நேரே உணர்வதே மனோநாசம். இப்போதோ எப்போதோ மனத்திற்கு தனியானதோர் இருப்பேயில்லை. இவ் உண்மையை நன்கு உணர்ந்தால் உலகமோ விவகாரமோ நம்மை என்ன செய்யக்கூடும்? வேலை தானே நடக்கும். வேலை செய்யும் மனம் நாமல்ல; அது ஆத்மாவின் மீது வெறுந் தோற்றமே என்பதை நன்கு காண்பதே மனோநாச ஸாதனம்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.296 - பதிப்.2000] ஸ்ரீ பக: இத்துன்பங்கள் யாருக்கென்று விசாரித்தால், நான் துக்கப்படு கிறேனென்று கருதும் அகந்தையே ஓர் நிழல் மாத்திரமே என்று உணர்வோம். அது தோன்றி மறைந்து கொண்டிருக்கிறது; தோன்றாது மறையாது அதன் அடிப்படையாக என்றும் ஓரியல்பாய்த் துலங்கும் கேவல சித்ஸ்வரூபமே நாமென்றுணர்வோம். அவ் அமைதிமயமே நாம். இதுவே மெய்ஞ்ஞானம், துன்மத் தொடர்பேதுமற்ற நித்யானந்த நிலை.*

*[ஸ்ரீ ரமண மகரிஷியின் பொன்மொழிகள் - பக்.47 - பதி.2004] தேகாத்ம புத்தியே கஷ்டங்கள் அனைத்திற்கும் மூலாதாரம். ஆன்ம விசாரணையில் அது*

அறவே ஒழிந்த உடனேயே கலப்பிலா ஆனந்தத்தைக் காணலாம். அந்த ஆனந்தம் தோன்றி மறைவதன்று; என்றும் நமது இயல்பாகவே இருப்பது.

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.149 - பதிப்.2000] ஸ்ரீ பக: நானென்னும் அகந்தை யாதெனக் காணுங்கால், அவ்வாறொன்றும் இலதாக, அங்கே எஞ்சியுள்ள தனது நிஜஸ்வரூபமே கடவுள். காண்பான் காட்சி யாதும் அவரே. அவருக்கயலாய் எதுவுமில்லை. பேதம் சற்றுமற்ற அகண்ட ஆத்மானுபூதியே கடவுளைக் காணல் (உள்ளது நாற்பது-20).*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.213 - பதிப்.2000] ஸ்ரீ பக: ஆத்மாவாம் உண்மை ஒன்றேயுள்ளது. பிறயாவும் அதனிலே தோன்றி மறையும் நிழற்கூட்டங்களே. காண்பான் - காட்சி - காண் பொருள் என்னும் திரிபுடியெல்லாம் ஆத்மாவில் அடக்கம்.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.419- பதிப்.2003] ஸ்ரீ பக: எது நிதர்சனமோ, தானே தெளிவாகிறதோ, நமக்கு மிக சமீபத்தில் உள்ளதோ அதை நாம் பார்க்க முடியவில்லை என்கிறோம். நேர்மாறாக இந்த கண்களால் காண்பவற்றை மட்டும் பிரத்யக்ஷம் (நேரில் காண்பது) என்கிறோம். எதையாவது காண்பதற்குமுன் காண்பவன் இருக்க வேண்டும். நீயேதான் காணும் கண், ஆனாலும் அந்த காண்கின்ற கண்ணை தெரியாது, காணப்படும் பொருள்களைத்தான் தொகிறது என்கிறாய். ஆனால் ஆன்மா இல்லாமல் எது காணப்படும்?*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.126 - பதிப்.2000] ஸ்ரீ பக: எதை விட்டோ நாம் பிரிந்து விட்டதாகக் கருதி அதனை அடைய முயல்கிறோம். அவ்வாறு கருதுவது யாரென்று அவ்வகந்தையின் மூலத்தைக் கவனித்துக் கொண்டேயிருந்தால்,*

*பிரிவுணர்ச்சி அறவேயகன்று, பிரிவேதும் சற்றுமிலாப் பரிபூரணமே நாமாய்த் திகழ்வோம்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.244- பதிப்பு 2004] ஸ்ரீ பக: தூக்கத்தின்போது எம்முயற்சியுமின்றியே அகந்தையற்று, அதனால் விளையும் கிலேசம் சற்றுமற்று ஆனந்தமயமாயிருக்கிறோம். விழிப்பு நிலைமையிலும் அவ்வாறே அகந்தை எழுச்சி அற்றிருந்தால் துன்பமெதுவும் தோன்றாது. ஒரே ஆனந்தமயமாய் இருக்கலாம். அதுவே ஆத்மானுபூதி.*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள்-பக்.168- பதிப்பு 2004] ஸ்ரீ பக: எப்போதும் உள்ள தூய உணர்வு ஆனந்தமயமாகவே இருக்கிறது. இருப்பு, உணர்வு, ஆனந்தம் என்னும் இம்மூன்றும் ஒன்றே. அந்த ஒன்றே நாம். அதுவே நாமாக இருந்தும்கூட, அறியாமையினால் 'தெரியவில்லையே' என்று வருந்துகின்றோம். ஆகவே, இவ்வறியாமை என்னும் பிரதிபந்தத்தை அகற்றினால் ஆனந்தமயமாம்.*

ஓம் ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்த்து

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| *திரு* | *ஸ்வாமிஜி, ராமகிருஷ்ணமடம், சென்னை* | 1000 |
| *திரு* | *சுப்பிரமணியம், ஆதம்பாக்கம்* | 500 |
| *திருமதி* | *வித்யா சங்கரன், மைலாப்பூர், சென்னை* | 575 |
| *திரு* | *எஸ்.எஸ். ராமநாதன், கே.கே.நகர், சென்னை* | 650 |
| *திரு* | *வி. ராமகிருஷ்ணன், கோடம்பாக்கம்* | 2000 |

# அறியாமையின் அறியாமை

**சு.பரமேஸ்வரன், கோவை**

மனிதகுலம் தோன்றி, பல ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டது. மனிதகுல வரலாறு சிந்தனைக்குரியது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தொல்காப்பியர் உயிரினத்தை அறுவகையாகப் பிரித்தார்.

*புல்லும் மரனும் ஓரறிவினவே*
*நந்தும் முரளும் ஈரறிவினவே*
*சீதலும் எறும்பும் மூவறிவினவே*
*நண்டும் தும்பியும் நான்கறிவினவே*
*மாவும் புள்ளும் ஐயறிவினவே*
*மக்கள் தாமே ஆறறிவுயிரே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே*

ஆக மனிதன் ஆறாவது அறிவையுடையவன். சிறப்புடைய பிறப்பு, மானிடப் பிறப்பேயாகும்.

இன்றைய சமூக வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி யாவும் மனிதனின் சிந்தனை ஆற்றலின் வெளிப்பாடேயாகும். ரமண பகவான் அருளிய உள்ளது நாற்பதில் ஒரு பாடல் நம் கவனத்தை ஈர்க்கிறது.

*அறிவுஉறும் தன்னை அறியாது; அயலை*
*அறிவது, அறியாமை அன்றி - அறிவோ?*
*அறிவு அயற்கு ஆதாரந்தன்னை அறிய*
*அறிவு - அறியாமை அறும்*

உலகில் உள்ள புறப்பொருட்களை ஆராய்ந்து அறிவது எல்லாம் அறியாமையே தவிர, அறிவல்ல. அறிவிற்கு ஆதாரமானதை அறிய, அறியாமை - அறிவு

அகலும். தன்னை அறிவதே அறிவு என்பது பாடலின் பொருள். இதே கருத்தை திருமூலரும்,

அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறிகிலார்" - 2327

என்பார். ஆனால் தாயுமானவரோ,

சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே என்பார்.

அறிவு என்ற சொல்லை ரமணர், திருமூலர், வள்ளுவர் போன்றோர் என்ன பொருளில் பயன்படுத்துகின்றனர் என்பதை சற்று உற்று நோக்க வேண்டும். அறிவு/அறியாமை என்ற சொல்லுக்குரிய உண்மைப் பொருள் யாது? என்பதே இக்கட்டுரையின் கருப்பொருள்.

நாம் அறிவு என்றும் அறியாமை என்றும் பேசுவதெல்லாம் மனத்தின் செயலை வைத்தே. சாமானிய மனிதரிடம் இரண்டு வித அறியாமைகள் உண்டு. ஒன்று அறியாமை மற்றது அறிவு என்று நினைத்துக் கொண்டிருக்கும் அறியாமை. இதுவே அறியாமையின் அறியாமை. சிந்தனை என்பது வெளிச்செல்லும் உலகியல் கல்வி. ஆங்கிலத்தில் அறிவு என்பது நாலெட்ஜ் (Knowledge) என்றும், ஞானம் என்பதற்கு விஸ்டம் (Wisdom) என்றும் அறியப்படுகிறது. பொருள் (Subject) பற்றிய அறியும் திறனே அறிவு எனவும், ஞானம் என்பது ஆத்மஅறிவு, தன்னை அறிதல் எனவும் சொல்லப்படுகிறது. பல செய்திகளை, பல புள்ளி விவரங்களை மூளையில் பதிய வைத்து மீட்டு எடுத்து அழகாக பேசுவது, எழுதுவது யாவும் அறிவுடைமையாகாது. அறிவிற்கும், அறியாமைக்கும் உள்ள வேறுபாடு மிகப்பெரியது. பலரும் அதை முழுமையாக உணரவில்லை.

அறிவின் தளம் மூளை; ஞானம் - மெய்யறிவின் தளம் இதயம் எனும் சிதாகாசம். இதயத்தின் சூட்சும உணர்வே ஞானம்.

உண்மையான அறிவு துன்பத்தை - அறியாமையை மாற்றுங் கருவி.

அறிவு அற்றம் காக்கும் கருவி
அறிவுடையார் ஆவது அறிவர்

என்பன பொய்யாமொழியார் வாக்கு. இன்றைய உலகில் வன்முறையும், பேரழிவுகளும், அதர்மமும் தலைவிரித்து ஆடுகிறதே ஏன்?! நாம் எல்லாம் மனம்போன வழி வாழ்வதால் வந்த வினை. மனித துன்பத்திற்கு மூலகாரணம் இரண்டு. ஒன்று அவனுடைய மூளை, மற்றது அவனது உணர்ச்சி. உணர்ச்சியினால் தூண்டப்பட்டு, மூளையினால் முட்டுக்கட்டை போடப்பட்டு அவதிப்படுகிறான்.

புல்லறிவாளன்

அறிவு எனும் ஒளிக்கு அறியாமை என்னும் இருள் எதிர்மறையாக உள்ளது. சிந்தனை அல்லது பகுத்தறிவு காரண காரியம் காட்டும் தர்க்க அறிவு என்பது மன அறிவு. இதுவே ஆறாவது அறிவு. தன்னை உணர தடையாக உள்ளவை ஐம்புல அறிவும், ஆறாவது அறிவான மன அறிவுமே ஆகும். அறியாமைதான் எல்லாத் துன்பங்களுக்கும் வன்முறைக்கும், அடித்தளமாக இருக்கிறது. அறியாமையே துன்பத்தை இன்பமாகக் கருதச் செய்யும்; பொருளுக்காக எதையும் செய்யத்தூண்டும். ஆகவேதான் வள்ளுவப் பெருந்தகை முதலில் மனிதனை அறியாமையிலிருந்து விலக அறிவுறுத்துகிறார்.

பிறப்பென்னும் பேதமை நீங்க, சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு

அறியாமை, பேதமை, மால், மயக்கம் யாவும் ஒரு பொருள் குறித்த பல சொற்கள். செம்பொருள் காண்பது என்பது தன்னை அறிதலாம். ஒரு நிலையில் அறியாமையைக்கூட மன்னிக்கலாம்.

ஆனால் அறியாமையை அறிவு என்றே நம்பி, தன் முனைப்போடு உள்ள புல்லறிவாண்மை மிகக் கொடியது. அறியாமையில் உள்ளவர்கள் திருந்த நிறைய வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் தாம் அறியாமையில் உள்ளோம் என்று அறிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. புல்லறிவுடையோன் திருந்தவே முடியாது, ஏனெனில் தனது அறியாமையை அறியாமல், அறிவுடையோன் என தன்னை எண்ணுவதால் தேறான். அறியாமை என்பது ஒன்றும் அறியாததன்று, மன அறிவினிடத்தில் இருப்பதே அறியாமை. திருவண்ணாமலையில் அடக்கமாகி உள்ள இடைக்காட்டுச் சித்தர் தமக்கே உரிய மொழியில் கூறுவார்.

எல்லாப் பொருள்களையும் எண்ணப்படி படைத்த
வல்லாளன் தன்னை வகுத்தறி நீ புல்லறிவே!
ஆத்துமத்தின் அவயப்பேய் உன்னுடனே
கூத்துப் புரிகின்ற கோளறிவாய் நீ - புல்லறிவே!
விழித்திருக்கும் வேளையிலே விரைந்துறக்கமுண்டாகும்
செழித்திலங்கும் ஆன்மாவைத் தேர்ந்தறிநீ - புல்லறிவே!

ஆக உலகில் நம்முடைய முடிவான அபிப்பராயம் கொள்கை என்று எதுவும் இல்லை. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, நாம் அறியும் முடிவைக் கொண்டு நிறுவும் அபிப்ராயங்கள் வெறும் வேடிக்கை விளையாட்டே. நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகிறோமோ என்பதுதான் சிந்தனைக்குரிய முக்கிய பிரச்சனை. உலகியலுக்கு மனித சிந்தனையே போதுமானது. அறிவியலுக்கும் அதுவே போதுமானது. சிந்தனை என்ற சிற்றடியை விட்டு நாளும் இறைவனின் நல்லடியை நினைந்து, நினைந்து முடிவில் அதையே உள்ளபடி உணரும் வாலறிவை அடைய வேண்டும். இதற்கு வழி என்னவோ?

நான் எனும் மையப் புள்ளியை வைத்து சுழல்வதே சிந்தனை; எனது என்னுடையது என்பது அதன்

சுற்றுப்பாதை, அகம் விருத்தி என்பது நான் எனும் சிந்தனை ஓட்டத்தினால் ஏற்படும் உருவமாற்றம். மனவிகாரம் அற்றுப் போனால் மனதுக்கு மரணம் ஏற்படும். மனம் இறத்தல் என்றால் செயலற்று இருப்பது அல்லது தூங்கவைத்தல் எனலாம். மனம் எப்போதும் எதிர் மற்றும் இறந்த காலத்தில் மிகுந்த அக்கறையுடன் சிந்திக்கும். ஆனால் நிகழ் காலத்தைக் கண்டு அஞ்சி ஓடும். மனம் சதா சிந்தித்து இருப்பது சுய பாதுகாப்பு கருதியே. மன விருத்தி அற்ற மோன நிலை என்பது மனதிற்கு ஏற்படும் மரணமாகும். அது ஒரு போதும் தனது மரணத்தை விரும்பாது; தியானம் மற்றும் ஆத்ம விசாரணை செய்ய விடாது. மனமே பல தடைகளை ஏற்படுத்தும்.

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி, ஏழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததெலாம் போதும் பராபரமே

என்ற தாயுமானவரின் வாக்கு சிந்தனைக்குரியது.

மனிதன் என்பவன் அவன் மனமேதான். நமக்கு தூல உடல் இல்லையெனில் இவ்வுலகம் இல்லை என்பதை எந்தப் பாமரனும் அறிவான். உடல் என்பது மனம் சொல்வதைச் செய்யும் கருவி. மனமும் பொய்யானால் அதற்கு மேல் என்ன என்பதைச் சிந்திப்பாரில்லை. வாழ்க்கை என்பது வழக்கம். வழக்கம் என்பது பழக்கத்தால் வந்தது. தொடர்ந்து செய்யும் பழக்கமே வழக்கமாகி வாழ்க்கையானது. பழக்கம் என்பது நாம் பிறந்ததிலிருந்து பெற்றோர்களால், ஆசிரியர்களால், கல்வியால், சமுதாயத்தால் கற்பிக்கப்பட்டவையாகும். அவைகளையே நாம் நம்பினோம். அந்த நம்பிக்கையோடே இருந்து கடைசி வரை சிந்திக்காமலேயே மாண்டுவிடுகிறோம்.

கல்வி அறிவு, கலை அறிவு, தொழில் அறிவு விஞ்ஞான அறிவு என பலவகையாலும் பரந்து மனித வாழ்வை வளம் படுத்தியுள்ளது.

திருவள்ளுவர் கல்வியையும், அறிவையும் ஒப்பிட்டு இரண்டு கேள்விகளை முன் மொழிகிறார். மதியுடைய மனிதன் பதில் கூற வேண்டும்.

கற்றதனால் ஆய பயன் எது?
அறிவினால் ஆகுவது உண்டோ

சிந்தித்து உய்யுமாறு விந்தையாய் போதித்துள்ளார். நம் ஊனக் கண்களுக்குத் தெரியும் கோள்களும், நட்சத்திரங்களும் எங்கே இருக்கின்றன? வெட்ட வெளியில் இருந்து கொண்டு, அந்தப் பர வெளியில் இருந்தே சக்தியைப் பெறுகின்றன. பிரபஞ்ச இயக்கம், முறையாக சீராக பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது எனில் அந்த இயக்கத்தைச் செய்யும் சக்தி பேரறிவுடைய சக்தியாகத்தான் இருக்க வேண்டும். அந்த அறிவாகாரப் பொருளை பரவெளியாக தமிழ் சான்றோர்கள் கண்டார்கள். அருள் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடி எல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்தது எது? என்று எடுத்த எடுப்பிலேயே அருள் ஒளியைப் பாடிய பெருமகனார் தாயுமானவர்.

அறிவாக இருக்கும் அப்பெருவெளி அருளாகவும் வெளிப்படுகிறது. உலகத்து உய்யும் உயிர்கள் செய்யும் பொருட்டு அறிவாகிய அப்பரம்பொருள் பரமகருணை கொண்டு, மனுக் கோலங்கொண்டு குருவடிவாக - அருளாளர்களாக மண்ணுலகிற்கு வருகிறது. பக்குவப் பட்ட ஆன்மாக்களுக்கு தன் வடிவாகிய இருப்பை, இயல்பைக் காட்டி பார்த்து உணர்ந்து கொள் எனத் தன்னைக் காட்டிக் கொள்கிறது.

தன்னை அறிந்தவன் சாமியாய் வாழ்கிறான்
பின்னை அறிந்தவன் பேயாய் அலைகிறான்
மதி கெட்டான், கதி கெட்டான்

என்பது முதுமொழி. ஐயன் திருவள்ளுவர், வான் சிறப்பு எனும் இரண்டாம் அதிகாரத்தில் இந்த வெட்ட வெளியின் பெருந்திறனை அருளை

உருவகமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். பரம் பொருள் உலக இயக்கத்திற்கு, உயிர்களுக்கு அமுதமாய் வான் மழையாகப் பொழிகிறது. நீர் இன்றி அமையாது உலகு. அறிவு என்பதும் அன்பு என்பதும் பண்பு. அறம் என்பது செயல். அன்பு உள்ள இடத்தில் நடைபெறுவது அறம். அறவோர் என்பர் அன்புடையவர். அன்பு பெருக்கத்தால் அருள் எனப்படும் அருள் என்பது எல்லை கடந்து இயல்பாய் எவ்வுயிர்மீதும் காட்டப்படுவதாகும். அறிவின் உன்னத நிலை சமபாவனையே. அருள், இரக்கம், கருணை என்பன வரம்பற்ற ஞான நீர்மைகள். இதை ஞானிகளிடமே காணலாம்.

அறிவே ரமணம் அன்பே சிவம்

பெரிய புராணத்தில் உள்ள நாயன்மார்களில் வேடன் கண்ணப்பரின் சரிதம் மிகவும் சிறப்புடையதாகும். காட்டில் வாழும் வேடனை 'கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பர்' என சுந்தரரும் 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' என மாணிக்க வாசகரும், பரமஞானிகளான பட்டினத்தார், ஆதிசங்கரர், தாயுமானவர் மற்றும் பலரும் புகழ்ந்து பாடிய கண்ணப்பரின் செயல்தான் என்ன? உமிழ் நீரால் அபிஷேகம், பன்றி மாமிசத்தை நிவேதனம் செய்தது செருப்புக்காலால் சிவலிங்கத்தைத் தீண்டியது யாவும் பகுத்தறிவு கொண்டு பார்த்தால் அருவருக்கத் தக்க செயல் அன்றோ?

வேடன் கண்ணப்பர், கடவுளைப் பற்றிய எந்த ஒரு வர்ணணையும் அறியாதவர். கண்ணப்பர் எது வேண்டிக் கடவுளை தொழுதார்? ஏதேனும் கடவுள் தருவார்; என்றா கண்ணப்பர் ஆண்டவனை வழிபட்டு தன் கண்ணைப் பிடுங்கி அப்பினார்? இல்லையே? கடவுளின் கண்ணில் ரத்தம் வழிவதைக் கண்டு இவரால் பொறுக்க முடியவில்லை. கடவுள் கண்ணெரிய, இவரது கண்ணும் எரிந்ததுதான் இதிலுள்ள உயர்வு. காந்தத்தின் எதிரே இரும்புதனித்து நிற்கமுடியுமோ?

அதுபோல் கண்ணப்பரும் கடவுளின் உணர்வோடு ஒன்றி இணைந்தார். மற்ற அடியார்கள் எல்லாம் முக்தி அடையவேண்டும் என்ற அவா நெறியில் நின்றார்கள். கண்ணப்பர் மட்டுமே அன்பு நெறியில் நின்றார். இறவாமை, பிறவாமை, மறவாமை இன்பம் எதனையும்; வேண்டிலர். அவைப் பற்றி ஏதும் அறிந்திலர். ஒன்றும் வேண்டாத உயர் நிலையில் நின்றார். இவ்வாறு உயர் நிலையில் இருந்ததால் அல்லவா இவரது வழிபாட்டை ஏற்று, இறைவன் திருவருள் செய்தார். தெய்வப் புலவர் சேக்கிழாரும் இறைவனே அருளியதாக ஒரு அரிய பாடலைப் பதிவு செய்கிறார்.

அவனுடைய வடிவெல்லாம், நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ என்று அருள்
செய்வார்.

கண்ணப்பரது திருமேனியானது என் மீது கொண்ட அன்பின் முழுவடிவம் அவனுடைய அறிவு எல்லாம் எம்மை அறியும் அறிவு, அவனது செயல் யாவும் எனக்கு இனிமைதருவன. இதை நீ புரிந்துகொள். ஐயப்படாதே? என ஞானமேவடிவாக இருந்த கண்ணப்பரது அன்பின் திறத்தைப் பற்றி பெருமைபடப் தெய்வப்புலவர் சேக்கிழார் பாடிவைத்தார்.

அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்,
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே - திருமந்திரம்

அன்பு நெறி என்பது பக்தி நெறியினும் வேறாக ஞானமார்க்கத்தில் வரும் சமபாவனை என்ற தன்னுணர்வினை ஒருவாறு குறிக்கின்றது எனலாம். கண்ணப்பரது அன்பு கங்குகரையற்ற கடல்.



ரமண பகவான் நாயன்மார்களது சிறப்பை, வாழ்வியல் ஆழத்தை உள்ளவாறு, இறையருளால் உணர்ந்து வாழ்ந்துகாட்டியதுபோல் யாரும் இல்லை என்றால் மிகையாகாது.

ரமணரும், கண்ணப்பரைப் போன்றே இறைவனிடம் எதுவும் வேண்டாதவர். பிரம்மம், முக்தி, இறவாமை, பிறவாமை என எதுவும் அறியாத இளம் பருவத்தே, சுருதிகள் கூறும் எதை அறிந்தால் எல்லாம் அறிந்தவர் ஆவாரோ அதை இறைவனின் அருட் கொடையாக 17 வயதில் அவருக்கு அருளப்பட்டது. அருணை ஈசன் அவரை ஆட்கொண்டார். அவரது முயற்சியாலோ, அறிவினாலோ அவர் அருணை ஈசனுக்கு அன்பராயினர் அல்லர். பெரிய புராண நாயன்மார்களது வாழ்க்கையை

ஒரு புதிய கடவுட் காட்சியாய்க் கண்டார். அந்தக் கடவுட் காட்சியானது எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிறை என்ற சமநோக்கு அவரது அன்றாட வாழ்வியலானது. மனிதர்கள் மட்டுமல்லாது, செடி, கொடி, மரம், நாய், பசு, குரங்கு, அணில் என அஃறிணை உயிர்களிடத்தும் அவர் காட்டிய பரிவு உலகம் அறியும். பூமித்தாய் மீது கொண்ட பரிவு, கல்லிலும், முள்ளிலும் செருப்பு அணியாமலே 54 ஆண்டுகள் நடந்தார் என்றால் அது கங்கு கரையற்ற கருணைக் கடலின் வெளிப்பாடு. இது எவ்வாறு சாத்தியம் ஆயிற்று என்றால் முன்பு செய்த தவத்தின் பயனேயாகும். இதற்கு திருமூலரின் திருமந்திர பாடலே பிரமாணம்.

முன்னை அறிவினிற் செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவது அறிவாம், அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறிவாகும்.

ரமணர் மானிடக் கோலங்கொண்டு அருணைஈசனை சரணடைந்து 54 ஆண்டுகள் அன்பின் வடிவமாக, அறிவு சொரூபமாக, நம்முன் வாழ்ந்து காட்டியது அதிசயமோ, அற்புதமோ இல்லை. வாழையடி வாழையாக அன்பு நெறியில், ஞானத்தில் உறைந்து நிற்கும் தமிழ் மண்ணின் சாரமே அதுதான்.

ஆக சேக்கிழார் பெருமான் கண்ணப்பரைப் புகழ்ந்து பாடிய பாடல் ரமணருக்கும் முற்றிலும் பொருந்துமன்றோ!

அருணை ஈசன் மீது கொண்ட அன்பே அவரது திருமேனி. அவரது செயல் எல்லாவற்றையும் அருணை ஈசன் செயலாகவே எப்போதும் கருதினார். அப்பாவிற்குப் பிள்ளை அடக்கம் என்றே எப்போதும் கூறுவார்.

முடிவாக அறிவு என்பது அன்பேயாகும். அதுவே சிவம். அன்பு என்பதும் அறிவு என்பதும் ஒரு

நாணயத்தின் இரண்டு பக்கங்கள். அன்பு/பரிவு என்பது ஆழமான உணர்த்த முடியாத மோனநிலை உணர்வாகும். இது தன்னலமற்ற மேன்மையான பண்பில் பொதிந்துள்ளது. அன்பு/பரிவு இன்மைக்குக் காரணம் அகந்தைதான். அகந்தை அறியாமையோடு இணைந்துள்ளது. அன்பு அறிவோடு பிணைந்துள்ளது. பரிவு தனது மைய வாழ்விலிருந்து அவனை உயர்த்துகிறது.

உணர்வு/அன்பு சிறப்பது இதயத்தின் இயக்கத்தில். இதயம் மனிதனை இயக்குகிறது. அறிவு உலகை ஆட்டிப் படைக்கிறது. மற்றவர்களின் உள்ளங்களில் வாழச் செய்கிறது. பரிவு உள்ளவன் மற்றவர்களின் இடத்தில் தன்னை அமர்த்திக் கொண்டு அவர்களைப் போலவே மாறிவிடுகிறான். துயர் உற்றவர்களுக்கு வேண்டியது பரிவும், உதவியும் தான். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்றால் பிறர் துன்பங்களுடன் தாமும் ஒன்றாகி விடுவதுதான். ஒருவருக்கு உள்ளத்தில் அன்பு, பரிவு பிறக்க வேண்டும் என்றால், அவர் தன் இதயத்தில் இருந்து ஏமாற்றும் இழி எண்ணத்தையும் தன்னலத்தையும் தூக்கி எறிதல் வேண்டும். இதுவே பட்டறிவு, அதுவே பிறர் துன்பத்தைக் கண்டு கொள்கிறது. மன அறிவு மூளையின் செயல் காரண காரியங்களை ஆராய்ந்து செயல்படுவது. சிந்தித்தலுக்கும், செயலுக்கும் இடைவெளி காலதாமதம் ஏற்படுகிறது. பகுத்தறிவு - தர்க்கவாதம் அவனை வஞ்சிக்கிறது. காரண, காரியம் ஆராயாமல் உடன் செயல்படுவது திருவருட் சக்தியாகும். இதயத்தின் செயல். இங்குக் காலம் புகுந்து தாமதம் செய்வதில்லை.

பரிவின் தோழன் அறிவுதான் உணரும் இதயமும், பார்க்கும் விழிகளும் இணை பிரியாதவை. பரிவு தன்னைத் தியாகம் செய்து, பிறரைக் காக்கத்

தூண்டுகிறது. பரிவு உள்ளவராய் ஆகும்போதுதான் நாம் பார்வையாளராக (Observer) மாறுகிறோம். உயிர் தளிர்த்து, மகிழ்ந்து வாழ அன்பு, பரிவு தேவை. அது உள்ளத்தில் ஊற்றெடுக்கவேண்டும் அன்பின் வழியது உயிர் நிலை. பரிவு உள்ளவர்களே மனித இதயங்களைக் காண்கிறார்கள்.

வாழ்வை முன்னேற்றும் சக்தி அன்புதான். புத்தர், ரமணரின் மானுட வாழ்வில் ஒளியாக மூலதனமாக இருந்தது அன்புதான். அன்பின்றி அறமும் இல்லை அருளும் இல்லை அறிவும் இல்லை எனலாம். மனித குலத்தின் அறிவோ இன்னமும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. வளர்ந்துள்ள விஞ்ஞான அறிவு இன்றும் பருப் பொருள்களை ஆராயந்தே முடிந்தபாடில்லை. இறைவன் பொருளுக்கும் பொருளாக இருக்கிறான். அன்பே ரமணர், ரமணரே அன்பு. ரமணரின் அன்பை, அருளை அறிந்து அனுபவித்தற்குரிய சூட்சம மனம் நம்மிடம் வேண்டும் அவரது அருள் வற்றாத ஊற்றாக உணர்வின் வெள்ளமாக உள்ளது.

“அன்பேசிவம் அறிவே ரமணம்”

இப் பேருண்மைகளை செவிபெற்றவர்கள் கேட்பாராக! நெஞ்சுளோர் நினைவாராக! அறிந்தவர் அறிவாராக!

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2016

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 23 | சனி | காலை 7.07 | 24 | ஞாயிறு | காலை 6.48 |
| பிப்ரவரி | 21 | ஞாயிறு | இரவு 10.06 | 22 | திங்கள் | இரவு 10.54 |
| மார்ச் | 22 | செவ்வாய் | மதியம் 2.29 | 23 | புதன் | மாலை 4.07 |
| ஏப்ரல் | 21 | வியாழன் | காலை 7.26 | 22 | வெள்ளி | காலை 9.51 |
| மே | 21 | சனி | நள்ளிரவு 12.00 | 22 | ஞாயிறு | நள்ளிரவு 12.00 |

# அருள் என்னும் அதிசய சக்தி

**கீதா ரவிச்சந்திரன்**

*[இந்தக் கட்டுரை ஆசிரியை திருமதி. கீதா, பெங்களூர் வருமானவரி முதன்மை ஆணையர். ஸ்வாமி சாந்தானந்த புரியிடம் ஆத்மிகத்தை ஆழ்ந்து பயின்றவர்.]*

அருட் பொழிவின் வெளிப்பாடு ஒரு சிறப்புமிக்க நிகழ்வுகளுடன் சேர்ந்தே தோன்றும் என்றும் அதன் மூலம் இடையறாது கேள்வி எழுப்பும் மனம் மௌனம் உறும் என்றும் சாதகனுக்குள் ஒரு முழுமை உணர்வு தோன்றும் என்றும் பல சாதகர்கள் எண்ணுகின்றனர். எனவே இந்த ஆழ்மனது தேடலின் ஒரு பகுதியாக அருள் பெருக்கின் வெளிப்படைச் சின்னங்களைத் தேடி எழுதுவதிலேயே கழிகிறது. இந்த முயற்சியில் காணக் கிடைக்காத ஆற்றல் மிக்க அருட் பொழிவின் மெய்ம்மை காணப் படாமல் போகிறது.

ரால்ஃப் வால்டோ எமர்சன் கூறுகிறார்: ஒரு மணி ஓசைகூட எழுப்பாமல் கடவுள் நம்மிடையே தோன்றுகிறார். நமக்கும் எல்லையற்ற வான் வெளிக்கும் இடையே எந்த ஒரு திரையோ, கூரையோ இல்லாதது போலவே மனிதனாகிய விளைவுக்கும் கடவுளாகிய காரணத்துக்கும் இடையே எந்த ஒரு தடையோ, சுவரோ ஆத்மாவில் இல்லை. மனிதன் என்ற உணர்வு முடியும்போது, இறைவன் என்ற பேருணர்வு விழிந்தெழுகிறது (எமர்சன், The Over-Soul என்ற நூலிலிருந்து) ஒவ்வொரு விளைவிற்கும் அடித்தளமாக இருக்கும் அருள் அனைத்திலும் ஊடுருவி உள்ளது என்பதே அறியும் போதே ஞானம் உதயமாகிறது.



பரமாத்மாவின் ஐந்துவித செயல்பாடுகள் ‘பஞ்ச கிரியைகள்’ எனப்படுகின்றன. அவை, ஸ்ருஷ்டி (தோற்றுவித்தல்), ஸ்திதி (நிலைப்படுத்தல்), ஸம்ஹாரம் (ஒடுக்குதல்), திரோதானம் (மறைத்தல்), அனுக்ரஹம் (அருளல்) என்னும் முக்கியமான செயல்கள் ஐந்து வகையாக செயல்படுகின்றன. இந்த அநுக்ரஹ சக்தியே பரத்தின் மிக முக்கியமான வெளிப்பாடு. அதுவே மனித உயிர்களில் ஒரு மடை மாற்றம் நிகழும் சக்தி படைத்தது.

அருளின் இந்த சக்தியினை ஸ்வாமி சாந்தானந்தபுரி சௌந்தர்ய லஹரி ஸ்லோகத்தின் மூலம் விளக்குகிறார்.

*ப$^4$வானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்*
*இதி ஸ்தோதும் வாஞ்சன் கதயதி ப$^4$வானி த்வமிதி ய:*
*ததை$^3$வ த்வம் தஸ்மை திசஸி நிஜ ஸாயுஜ்ய பத$^3$வீம்*
*முகுந்த$^3$-ப்ரஹ்மேந்த்$^3$ர-ஸ்பு$^2$ட மகுட நீராஜித பதாம்*
*(சௌந்தர்ய லஹரி - 22)*

இதன் எழில் மிக்க பொருளாவது:

ஒருவன் தேவி பவானியை நோக்கி தாயே பவானி! நீ உன் அருள் நோக்கினை என்பால் செலுத்துவாய் என்று வேண்ட எண்ணி, பவானித்வம் (நீயேயாகவே ஆகிவிடுவது) என்று உன்னுடன் முழு ஐக்யத்தை அருள்கிறாய். உன்னுடன் ஒன்றிய அவன் உன் முன்னர் பணிந்து வணங்கும் ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலியோரின் மகுடங்கள் நாற்பது உனக்கு கற்பூர ஹாரதி காட்டுவதுபோல் இருப்பதைக் காண்கிறான்.

காஞ்சி பரமாச்சார்யர் கூறிய இந்த விளக்கத்தை ஸ்வாமி சாந்தானந்தர் மேலும் விளக்குகிறார். பவானி என்ற சொல் ஒரு பெயர்ச் சொல்லாகவும் இன்றி வினைச் சொல்லாகவும் பொருள் கொள்ளலாம். பவானி என்ற பெயர்ச் சொல் அன்னை பவானியைக் குறிக்கிறது. பவானித்வம் என்று இணையும்போது வினைச் சொல் என்று பொருள் கொண்டால் 'நான் நீயாகவே ஆகட்டும்' எனப் பொருள் படுகிறது. அன்னை பவானி ஒரு கருணைக் கடல். எனவே ஒரு பக்தன் அத்வைதமாய் ஒன்றுதல் என்ற நோக்கமே இன்றி, பவானித்வம் என்ற ஒரு சொற்களைக் கூறும்போது, அவள் தன் பெருங் கருணையால் அங்விரு சொற்களையும் ஒன்று கூட்டிப் பொருள் கொண்டு அவனுக்கு பவானித்வம் என்று தன்னுடன் அத்வைதமாய் ஒன்றுபடும் உயர்நிலையை வழங்குகிறாள். இதில் சிறப்பு யாதெனில் அந்த பக்தன் தனது முழு பிரார்த்தனையும் கூறும் முன்னரே முதல் இரு சொற்கள் செவியில் விழுந்த உடனே, விரைந்து அத்வைத சித்தியை வழங்குகிறாள்.

இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் அருள் வழங்குதல் என்பது வெறும் கவிதை. உயர்வு நவிற்சியாய் அது வேண்டுவோர் எல்லோருக்கும் உடனே கிடைப்பது. நாடுவோர் அனைவருக்கும் அது தடையின்றி வழங்கப்படும் என்பது ஓர் அநுபவ உண்மை என்னும் காரண-காரிய தொடர்புகளை ஆய்ந்து தன்னையே குழப்பிக் கொள்ளும் மானுடன், நம்பிக்கையின்மை என்னும் நோயால் பாதிக்கப்பட்டு துயருறுகிறான். எனவே நமக்கு அருள் கிடைக்க வேண்டும் எனில், அருள் பொழிதலின் அநுபவத்தைப் பெற நாம் ஏதேனும் செய்ய வேண்டுமே? நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்கு பகவானே பதிலளித்துள்ளார்.

கேள்வி: குருவின் அருள் எனக்குக் கிடைக்குமா?

பகவான்: அருள் எப்போதும், எல்லாவிடத்தும் உள்ளது.

கேள்வி: ஆனால் நான் அதை உணர முடியவில்லையே?

பகவான்: பூரண சரணாகதி ஒருவனை அருட் பொழிவை அறியச் செய்யும்.

பகவானின் இப்பதில் செறிவு மிக்கது. அருளைப் பெற சரணாகதி தேவையில்லை. அருள் எப்போதுமே பாய்ந்து கொண்டு உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளவே சரணாகதி தேவைப்படுகிறது. சரணாகதி சாதனையைப் பற்றி ஸ்வாமி மாதவ தீர்த்தருக்கு பகவான் விளக்குகிறார்.

கேள்வி: நாம் குருவிற்கோ, கடவுளுக்கோ சரணாகதி செய்யும் போது நம்முடைய தனித்துவம் மறைந்துபோய் அதனிடத்தில் ஒரு பெரும் மெய்ம்மை அமர்ந்து கொள்கிறது. அப்போது நம்மில் தெய்வீகம் ஒளிவிடுகிறது என்று கூறப்படுகிறது.

*பகவான்: நாம் சரணாகதி செய்தபின் நம்முள் ஒரு பெரும் தெய்வீக சக்தி வரும் என்ற எதிர்பார்ப்பே முழு சரணாகதிக்கு எதிரானது. அது உண்மையான சரணாகதி அல்ல.*

*சரணாகதி என்பது ஒரு பேரமல்ல. இறைவன் அருள் நம்மை எல்லா முயற்சிகளிலும் வெற்றி அடையச் செய்து எல்லாத் தொல்லைகளிலிருந்தும் நம்மை விடுவிக்கும் யந்திரம் அல்ல. இதற்கு சிறந்த விளக்கம் குந்தி செய்யும் நடைமுறைக்கு மாறான பிரார்த்தனைதான் இறையருள்மீது கொண்டுள்ள திட நம்பிக்கை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் குந்தி, 'எனக்கு மீண்டும் மீண்டும் தொல்லைகளை தந்தருள்க' என வேண்டுகிறாள். இப்படி பிரார்த்திக்கும்போது குந்திக்கு எப்படி அலையலையாய் வந்த தொல்லைகள் இறை அருளால் நீக்கப்பட்டது என்பதை நினைவு கூறுகிறாள். நாம் எதிர்பார்க்கும் முடிவு கிட்டும்போதுதான் அருள் செயல்படுகிறது என்பது தவறு. நாம் விரும்பிய முடிவு கிடைக்கும்போது ஏற்படும் ஏமாற்றத்தை உதறித் தள்ளும்போதும், அப்போது மன உறுதிப்படுவதிலும், தடைகளை முயன்று வெற்றி கொள்ளும்போதும் அருள் செயல்படுவதை நேரடியாக உணர்கிறோம்.*

*எங்கும் பரவியுள்ள அருள் வெளிப்பாட்டை பகவான் நடனானந்தருக்கு எடுத்துரைக்கிறார்.*

*என்முன் அமர்ந்துள்ள இந்த பௌதிக உடலா என் அருள் பெற விழைகிறது அல்லது அவ்வுடலில் உள்ள சித்-உணர்வா? அது சித் உணர்வு உதில் அதுவே தன்னை உடலாக எண்ணிக் கொண்டு இந்த வேண்டுகோளை விடுக்கிறதல்லவா? அப்படி எனில் முதலில் பிரக்ஞை உணர்வு, முதலில் தன் மெய்ம்மையை உணர்ந்து கொள்ளட்டும். அப்படி உணர்ந்த பின்னர் அது தானாகவே இறைவனையும் எனது அருட் பிரவாகத்தையும் உணர்ந்து கொள்ளும்.*

இந்த உண்மையை இங்கேயே, இப்போது அறிய முடியும்.

இங்கே பகவான் அருள் எங்ஙனம் பரவி உள்ளது என்பதை எடுத்து உரைக்கிறார். நாம் செய்யும் முயற்சி எல்லாம், அதனை அறிய முடியாமல் மறைத்திருக்கும் அறியாமைத் திரையை நீக்குவதே. அந்தத் திரை நீங்கும்போது அனைத்திற்கும் அடித் தளமாய், மாறாத அருள் பிரகாசிக்கிறது. ஒவ்வொரு சாதகனுக்கும் உள்ளே பிரக்ஞை உணர்வாய் உள்ள பேரருள் அப்போது மலர்கிறது. அதனைப் பெறத் தகுதி இல்லாதவராகக் கருதப்படும் மாந்தரிடையேகூட அதன் மாபெரும் சக்தி செயல்படுகிறது. இவ்வுலகினைத் தோற்றுவித்த இறைவன் தன்னுடைய எல்லா இருப்புகளின்மீதும் எந்த வேறுபாடுமின்றிக் காட்டும் பேரன்பின் வெளிப்பாடே இந்த அருட் பிரவாகம்.

பல்வேறு எல்லைகட்குள் கட்டுப்பட்ட அஹங்காரம் அழிக்கப்பட்டு இதயஸ்தானத்திலிருந்து ஆத்ம ஒளி சுடர் விடுவதை பேரருள் செயல்படுத்தும் வழியை 'அநுக்ரஹம்' என்னும் சொல் குறிக்கிறது. ஆத்ம சாட்சாத்காரத்தை அருள்வதை இந்த அருட்செயல் குறிக்கிறது. இறைவனின் பஞ்ச கிருத்தியங்களில் தோற்றுவித்தல், காத்தல், ஒடுக்கல், மாற்றுதல் என்று நான்கு செயல்களுமே அநுக்ரஹம் அல்லது அருள் என்னும் இந்த இறுதித் தொழிலுக்காகவே முன்னோடியாகச் செயல்படுகின்றன என்று கொள்ளலாம்.

இந்த அருட் பிரவாகம், தனது வெள்ளப் பெருக்கினை காலப்போக்கில் தயங்கித் தயங்கித் தவிக்கும் ஒவ்வொரு உயிரையும் தன்னுள் சேர்த்து ஆன்ம விசாரப் பெருங்கடலுள் சேர்க்கிறது.

# போராட்டம்

**மூலம்: நொச்சூர் வேங்கடராமன்**
**தமிழாக்கம்: கௌதமன்**

ஆன்ம வாழ்வில் போராட்டம் தவிர்க்க இயலாதது
முழுமை சத்யம், தூய்மை மற்றும் மௌனம்
இவற்றை எய்த முயலும் இடையறாத போராட்டம்
ஒவ்வொரு முறையும் தைரியத்துடன் நான் போரிடினும்
அந்தோ! மீண்டும் மீண்டும் நான் தோல்வியுற்றேன்.
அழுகை மீதுற அவனை பிரார்த்தித்தேன்
குழந்தாய்! உன்னுடைய தோல்வியை
முழுகவனத்துடன் கவனிப்பாய்! என்றான் அவன்.
மீண்டும் நான் போரிட்டாலும்
மீண்டும் தோல்வி உற்றேன்.
அப்போதுதான் அறிந்தேன் -
அது தன்முனைப்பின் தோல்வி,
ஒவ்வொரு தோல்வியும் என்னை விரிவாக்கியது
ஒவ்வொரு தோல்வியும் நான் ஒன்றுமேயில்லை
என்பதைத் தீர்க்கமாக உணர்த்தியது.
மீண்டும் மீண்டும் உற்ற தோல்விகளால்
'நான்' என்பது அறவே முறியடிக்கப்பட்டது.
சாந்தியையும், மௌனத்தையும் அடித்தளமாகக் கொண்டு
முழுமை உணர்வு அப்போதே உதயமானது.
இவ்வெளியில் அல்லவா இந்தப் போராட்டங்கள்
அனைத்தும் இடையறாது நிகழ்ந்து
தூய வெளியை அழுக்காக்கின்றன.
இந்தப் போராட்டம் முடிவுற்றபோது

*யுத்தமும் வெற்றி கொள்ளப்பட்டது.*
*ஐயம் பெற வேண்டி நிகழ்ந்த போராட்டங்கள்*
*தோல்வியிலேயே முடிந்தன.*
*ஆயின் இந்தத் தோல்வியில்தான்*
*எனது வெற்றியும் கருக் கொண்டது*
*போரிட்டு போரிட்டு தோல்விகளைத்தான் கண்டிருந்தேன்*
*என்னுடைய ஜீவிதத்தின் எரிந்த சாம்பலில்*
*பரம் உயிர்த்தெழுந்தது*
*அச்சமயம் உலகாயத ஆன்மிக*
*அவாக்கள் அனைத்தும் அழிவுற்றன*
*அச்சமயம் வெற்றியிலும் அடைதலிலும்*
*பெற்ற வெற்றிகள் அனைத்தும் அழிந்தன.*
*அச்சமயம் எல்லா ஆர்வங்களும்,*
*அச்சங்களும், குற்ற உணர்வுகளும், பொறாமைகளும்*
*அடியோடு அழிந்தன.*
*போராடிய வீரன் சிலுவையில் மரித்த*
*இந்தப் போர் மிக உயர்ந்த ஒன்றாகும்*
*இந்த இறப்பே*
*இறைவன், சத்யம், அன்பு*
*என்று பல்வேறு நாமங்களில் அறியப்படுகின்றது.*

## ஸ்ரீ ரமணாச்ரமம் - தமிழ் முகநூல் பக்கம்

*ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை 'ஸ்ரீ ரமணமகரிஷி' என்ற பெயரில் தமிழ்வழி முகநூல் பக்கத்தை (Facebook Page) துவக்கியுள்ளது. இந்த முகநூல் பக்கத்தின் வாயிலாக ஆச்ரம நிகழ்வுகளை பக்தர்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.*

# ஸ்ரீ பகவான் - உபநிடதங்களின் உரை

## Dr. T.M.P **மகாதேவன்**

*[1963 ஆம் ஆண்டில் 'கால் டிவைன்' ஆத்மிக சஞ்சிகை ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் Dr. T.M.P. மகாதேவன் அவர்களின் உரையின் தமிழாக்கம்.]*

ஓர் உடலில் குடியிருக்கும் வரை மனிதனின் அறிவுக்கு, எப்படி ஆத்மா பரத்துடன் அபேதமாக, வேற்றுமை அற்று இருக்க முடியும் என்பதை உணர இயலாது. இந்த உடலில் இருக்கும்போதே ஆத்ம சாட்சாத்காரம் அடைய முடியும் என்ற உண்மையை தயக்கமின்றி ஏற்றுக் கொள்வது அதை விடக் கடினம். எதையுமே பௌதிக அநுபவத்தால் மட்டுமே அறிகின்ற நமது சாமான்ய அறிவு, எத்தனை சக்தி குன்றிய ஒரு கருவி என்பதையே இது காட்டுகிறது. அறிவு அறிய முடியாத காரணிகளை இதயம் உணர முடியும். மனித மனம் வரையறுக்கும் எல்லைகளை எல்லாம் உடைத்து ஆன்மிக வானில் ஜொலிக்கும். ஜீவன் முக்தர்களின் அநுபவத்தை நம்மால் புறக்கணிக்க இயலுமா?

"நமக்கும் மகரிஷிக்கும் என்ன வேறுபாடு உள்ளது? அவரும்தான் நம்மைப் போலவே உண்டும் உறங்கியும் சிரித்தும் தனது வாழ் நாளைக் கழித்துக் கொண்டு இருக்கிறார்" என்று வினவும் சந்தேகப் பிராணிகட்கு நாம் விடையே பகரத் தேவையில்லை. இந்தக்

*கேள்வியே அர்த்தமற்ற ஒன்று. ஆத்ம சாட்சாத்காரம் என்பதின் பொருளையே உணராத மூடமனதில் எழும் ஐயம்தான் இது. முக்தி என்பதற்கு வழக்கமாக முறையில் இருநது விலகி, வேறுபட்டு இருக்கும் நிலையல்ல. அது தன்னுடைய நிரந்தரமான மெய்ம்மை நிலையை அத்வைதமாக உணர்வதாகும்.*

*"ஆத்மாவை ஒருவர் பூர்ணமாக உணர்ந்தபின், புற உலகம் காணப்படுகிறதா?" என்று ஒருவர் கேள்வி எழுப்பியபோது, பகவான் உடனே விடையிறுத்தார், "ஆத்மாவை நீ அறிந்தபின் ஆத்ம சாட்சாத்காரம் அடைந்தபின் உலகிற்கு என்ன ஆகின்றது என்பது பற்றியும் ஏன் கவலைப்படுகிறாய்? முதலில் ஆத்மாவை அறி. உலகை நீ கண்டால் என்ன, காணாவிட்டால்தான் என்ன? நீ தூக்கத்தின்போது உலகைக் காண்பதில்லை அதனால், உனக்கு ஆன்மிகத் தேடலில் பெரிய பலன் ஏதேனும் கிட்டுகிறதா என்ன? மாறாக, இவ்வுலகை இப்போது ப்ரத்யம்சமாகக் காண்பதன் மூலம் உனக்கு ஏதேனும் பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடுமா என்ன? ஒரு ஞானிக்கோ அஞ்ஞானிக்கோ உலகைக் காண்பதாலோ, காணாவிட்டாலோ பெரிய பாதிப்பு ஒன்றும் ஏற்படுவதில்லை. இருவருமேதான் உலகைக் காண்கிறார்கள்; ஆனால் உலகை அவர்கள் காணும் விதம்தான் வேறுபடுகிறது".*

*அப்படியானால், ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் உள்ள வேறுபாடுதான் என்ன? பகவான் இதற்கு விடையளிக்கிறார். "உலகைக் காணும்போது, ஞானி ஆத்மாவையே எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாக (அடிப்படையாக) காண்கிறான். ஓர் அஞ்ஞானியோ, உலகைக் கண்டாலும் சரி, காணாவிட்டாலும் சரி, தன்னுடைய ஆத்மாவைக் காண்பதே இல்லை. மெய்ம்மையை அறிய இந்த நோக்கில் ஒரு பெரும் மாறுதல் தேவைப்படுகிறது. ஒரு ஞானிக்கு உலகம்*



மெய்யல்ல. ஆத்மாவை அல்லது பிரம்மத்தை அன்றி வேறு எதுவுமே இல்லை. ஓர் அஞ்ஞானிக்கோ உலகம் நிரந்தர உண்மையாகத் தோற்றம் அளிக்கிறது. நம் பார்வைக்குத்தான் ஒரு ஞானி ஒரு தேகத்தில் இருப்பதாகவும், உலகில் ஒரு மனிதனாக வாழ்வதாகவும் தோன்றுகிறது. ஞானியின் பார்வையிலோ தேகம் என்றோ, உலகம் என்றோ ஒன்றுமே கிடையாது. நாம் உலக பந்தங்களால் கட்டுப்பட்டு இருப்பதால் ஞானிக்கு அவர் ஞானி என்பதற்கான வெளிப்படைச் சின்னங்கள் ஏதேனும் உள்ளனவா என்று தேடுகிறோம். ஆனால் 'இவர் ஓர் ஜீவன் முக்தர்' என்பதற்கான பொதுவான வெளிப்படைச் சின்னம் எதுவும் இல்லை. இதனை அறிய ஒரே வழிகாட்டி, நமது உள்ளுணர்வு அல்லது ப்ரக்ஞை ஒன்றே".

பகவான் ரமணரின் உபதேசத்தின் சாரம் அபேதமான ஆத்மா ஒன்றே உண்மையானது; மற்ற அனைத்தும் பொய்யானவை என்பதே. இதை ஆத்ம விசாரம் மூலம் அறிய முடியும் என்கிறார் பகவான். ஆத்மா ஒன்றே பூர்ணமான உண்மை; மற்ற அனைத்துமே பொய்ம்மை. ஆத்மா என்பதே சச்சிதானந்தம், இருப்புணர்வு, ப்ரக்ஞை மற்றும் பேரானந்தம். இந்த சச்-சித்-ஆனந்தம் என்பது அந்தப் பூர்ணத்தின் குணங்கள் என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. ஆத்மா குணங்களைக் கடந்தது. அந்த ஒரே பரிபூர்ண ஆத்மாவின் வெவ்வேறு வெளிப்பாடுகளே அவை. ஆத்மாவில் இருப்புணர்வும், ப்ரக்ஞை உணர்வும் ஒன்றாகவே உள்ளன. 'நான் உள்ளேன்' என்ற அநுபவமே இதற்குச் சாட்சி. ப்ரக்ஞை உணர்வு இல்லாமல் இருப்பு உணர்வு என்பது இருக்கவே இயலாது. ஆத்ம ப்ரக்ஞை இல்லாமல் 'நான் இவனாக இருக்கிறேன்' என்பது வெறும் சுட்டுணர்வே 'சத்' எனப்படும். இருப்பு உணர்வு ஒரு குணம் அல்ல; ஆத்மாவின் இயற்கையே அதுதான். அதனையே தத்துவ நூல்கள் 'வஸ்து' என்று குறிப்பிடுகின்றன. மெய்யுணர்வே 'சத்-சித்' (இருப்புணர்வு-ப்ரக்ஞை உணர்வு) என்று குறிப்பிடுகிறது. அதில் ஒன்று இல்லாமல் மற்றொன்று இல்லை. ஆத்மாவே சச்சிதானந்தம். உண்மையான ஆனந்தமே 'நான் ஆத்மா' என்ற அறிதல்தான். உபநிடதங்களும் ஆத்மாவை சத்யம்-ஞானம்-ஆனந்தம் என்று குறிப்பிடுகின்றன.

ஆத்மா பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. ஒருவரின் செயல்கள் அவரின் மறுபிறப்பில் பாதிக்காதா என்ற கேள்விக்கு பகவான் பதிலளித்தார்: "இப்போது நீ பிறந்துள்ளாயா? மற்ற பிறவிகளைக் குறித்து கவலைப்படுகிறாய்? உண்மையில் பார்க்கப்போனால் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. யார், தான் பிறப்பெடுத்துள்ளதாக எண்ணிக் கொண்டு இருக்கிறானோ அவன் பிறவிப் பிணியைத் தீர்த்துக்

கொள்ளட்டும். இதுதான் இறுதி உண்மை". மாண்டூக்ய காரிகையில் ஆச்சாரிய கௌடபாதர் கூறுகிறார். "எந்த ஜீவனுமே பிறப்படுப்பதில்லை. பிறப்பு எடுப்பது என்பதற்கு ஒரு காரணமும் இல்லை. இதுவே அறுதியான உண்மை. பிறப்பு என்று எதுவும் இல்லை. பரமாத்மா என்ற நிலையில் இருந்து பார்க்கும்போது எதுவுமே கர்ம சிந்தாந்தம், மறுபிறப்பு என்று எதுவுமே இல்லை. பகவானின் உபதேசம் இதுவே. அறியாமை இருக்கும்வரைதான் மறுபிறவி என்பதும் இருக்கும். இப்போதோ முன்னாலேயோ எப்போதுமோ மறுபிறவி என்று ஒன்று கிடையவே கிடையாது. இதுவே இறுதியான உண்மை". பிறப்பு-இறப்பு அற்ற ஆத்மாவிற்கு ஆரம்பமோ, இடையோ, முடிவோ எதுவுமே கிடையாது.

ஆத்மாவை அறியும் வழி யாது? பகவான் கூறும் நேர்வழி இதுவே. "ஆத்ம விசாரம் அல்லது உள்ளார்ந்த தேடல். மற்ற வழிகள் எல்லாம் மனதினைக் கடந்து செல்ல உதவுவதில்லை. விசாரம் மட்டுமே இதைச் செய்ய முடியும். ஆத்ம விசாரம் அன்றி மனத்தை அழிக்க வழிகாட்ட முயலும் சாதனைகள் எல்லாமே ஒரு திருடனே, போலீஸ் வேடம் அணிந்து கொண்டு திருடனைப் பிடிக்க முயலுவது போலாகும்" என்று பகவான் உவமை தருகிறார். ஆத்ம விசாரம் ஒன்றே மனத்தைப் பூர்ணமாக அழிக்கிறது. ஆத்ம விசாரத்தின் மூலம் மனமே மனத்தை அழிக்கும் கருவியாக மாறி, தன்னைத் தானே அழித்துக் கொண்டு, ஆத்மாவை மறைக்கும் திரையை நீக்கிவிடுகிறது. "'நான் யார்' என்று இடைவிடாது வினவு" என்று பகவான் வழி காட்டுகிறார். ஆனால் இந்த 'நான் யார்' விசாரணையே ஏதோ ஒரு மந்திரம் உச்சரிப்பதுபோல சொல்லிக் கொண்டு இருக்கக் கூடாது. மிகப் பொறுமையுடனும், அறிவார்ந்த ஆய்வுடனும், இடைவிடாத முயற்சியுடனும் இந்த விசாரணையைத் தொடர வேண்டும்; அதன்

பின்னரே, ஆன்மிக முன்னேற்றம் உணரப்படும். மகரிஷி கூறுகிறார்: "'நான் யார்' என்பது வெறும் மனம் சார்ந்த கேள்வியாய் மட்டுமே இருந்தால் அதனால் பெரிய பிரயோஜனம் ஒன்றுமே கிடையாது" ஆத்ம விசாரத்தின் முழு நோக்கமே மனத்தை முற்றிலும் அதன் மூலத்தில் ஒடுக்குவதே. 'நான்' என்னும் உணர்வின் தொடக்கமே (அஹம் விருத்தி) மனம்தான். ஆத்ம விசாரத்தில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஓடும் மனத்துடன் சேர்ந்து ஓடாமல் எங்கிருந்து இந்த மனம் எழுகின்றது என்று அதன் மூலத்தை ஆய்ந்து ஆழ்ந்து அறிவதே. மற்ற உலக விஷயங்களில் மனத்தை சிக்க வைக்கக் கூடாது. 'நான்' எழும் இடத்தை நாடும்போது இந்த 'நான்' என்னும் அகங்காரம் அழிந்துபடும். எதற்காக 'நான் யார்' என்று தொடங்குகிறோம். எல்லாத் தேடல்களையுமே நமக்கு நன்றாகத் தெரிந்த வஸ்துவில் இருந்துதான் தொடங்க வேண்டும். நமக்கு எப்போதும் நன்றாகப் பழக்கமான எண்ணம் 'நான்' என்பதுதானே? எனவே இதனையே நம் தேடலுக்கான உத்தியாகக் (Clue) கொண்டு தொடர வேண்டும். இதுவே ஒரே நேர்வழி.

இப்பாதையின் நோக்கத்தினை பகவான் இவ்வாறு விளக்குகிறார். "இந்த அஹம் விருத்தியின் ('நான்' என்னும் எண்ணம் தோன்றுமிடம்) தேடல் என்பது வெறும் அஹங்காரத்தின் தோற்றத்தின் அடிப்படையைத் தேடுவதல்ல, எதிலிருந்து 'நான்' என்ற இருப்புணர்வு தோன்றுகிறதோ அந்த அதிஷ்டானத்தையே தேடுவதாகும். அதாவது, பல்வேறு விதமான அஹம்-விருத்தித் தோற்றங்களாய் வெளிப்பாடுகளாய் தோன்றுகின்ற அடிப்படை ஆணவத்தின் மூலத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அதன் வெவ்வேறு விதமான வேஷங்களையும் நடந்து செல்வதே ஆத்ம சாதனை. ஆத்ம விசாரம் மிகவும் எளிதானது என்று கருத வேண்டாம். ஆயினும், இதைத் தவிர ஆத்ம சாட்சாத்காரத்திற்கு வேறு வழியே இல்லை.

மற்ற எல்லா வழிகளுமே இதில்தான் வந்து முடிய வேண்டும்".

இதயமே ஆத்மாவின் ஸ்தானம் என்று பகவான் கூறுகிறார். இதன் உண்மையான அர்த்தம் என்னவெனில், ஹ்ருதயம்தான் ஒரு வ்யக்தியின் மையமாகும். அவனது இருப்புணர்வின் அடித்தளம் இந்த ஹ்ருதயமும் நாமும் ஒன்றே. இதுவே அழியாத நிரந்தர மெய்ம்மை. பௌதிக உடலின் பகுதி ஒன்றை நாம் இருதயம் என்று குறிப்பிடுவது வெறும் செயல்பாட்டு சௌகர்யத்துக்காகவே என்று பகவான் தெளிவு படுத்துகிறார். இயல் கடந்த முடிவான மெய்ம்மை நிலையிலிருந்து பார்க்கும்போது இதயம் அல்லது ஆத்மா என்பதை பௌதிக தேகத்தின் உள்ளேயோ அன்றி வெளியேயோ இருப்பது என்று கூறுவது அபத்தம் என்கிறார் பகவான். உண்மையில் காணும்போது, ப்ரக்ஞை அல்லது மெய்யுணர்வு என்பது பிரிக்க முடியாத ஒன்று இதற்கு பாகங்களோ, தோற்றமோ உள்ளே-வெளியே என்ற நிலைகளோ எதுவுமே கிடையாது. அதற்கு இடது-வலது கிடையாது. மெய்யுணர்வு எனப்படும் ஹ்ருதயத்தில் எல்லாமே அடங்கும். அதற்கு வெளியேயோ, அதனின்றும் வேறுபட்டோ எதுவுமே கிடையாது. இதுவே இறுதி மெய்ம்மை என்பது பகவானின் விளக்கம். எனவே, உடலின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஹ்ருதயம் இடம் கொண்டு இருக்கிறது என்று கூறினால், அது ஒரு பாமரன் எளிதாகப் புரிந்து கொள்வதற்காக கூறப்படுமே அன்றி, அது அடிப்டை உண்மை அல்ல. அவன் எளிதில் புரிந்து கொள்வதற்கு உதவியாக, இருதயம் என்பது தேகத்தின் நடுவில், நடுக் கோட்டிற்கு இரு விரற்கடை தூரத்தில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இருதயம் என்பது நம்முள்ளே ரத்த ஓட்டத்தைச் செலுத்துவதாக இயங்கிக் கொண்டு இருக்கிற பௌதிக இதயமல்ல.

ஆத்மிக இருதயம் என்பது பௌதிக இதயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. நமக்கு ஒரு கேள்வி எழலாம். "உடலில் பல பகுதிகள் இருக்கும்போது, மார்பின் வலப் புறத்தில் ஆத்மிக இருதயம் உள்ளது என்று கூறுவதின் தாத்பர்யம் என்ன?" என்பதாம். இதற்கு விடையாவது: "ஒரு மனிதன் தன்னைத் 'தான்' என்று கூட்டிக் காட்டும்போது, உள்ளுணர்வால் தூண்டப்பட்டு, தனது மார்பின் வலப்புறத்தையே சுட்டுகிறான். இந்த இடத்தில்தான் ஆத்மாவும், உடல்-மனம் என்னும் ஒன்றும் மாயை என்னும் முடிச்சால் கட்டப்பட்டு தோன்றுகின்றன (சித்-சடக் கிரந்தி). இந்த முடிச்சை அவிழ்க்கும் பொருட்டு, சாதகன் தனது ஹ்ருதய மையத்தில் தன் கவனத்தை முற்றிலும் பதித்து, அதையே ஆத்மாவாக எண்ணித் தியானிக்க வேண்டும். ஒரு சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், பகவானின் உபதேசத்தினைப் பெரும்பாலும் ஒத்திருக்கும் வழியில் தனது தத்துவத்தினை விளக்கி எழுதியுள்ள கௌடபாதரும், ப்ரக்ஞை உணர்வு அல்லது ஆத்மாவை இதயத்தில் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். ஆத்மாவின் வெவ்வேறு வெளிப்பாடுகளான 'விஸ்வா' என்பதைக் கண்களாலும் 'தைஜஸ' என்பதை மனத்திலும்; ப்ரக்ஞை என்பதை இதயாகாசத்திலும் தியானிக்க வேண்டும்" என்று கௌடபாதர் கூறுகிறார். துரியம் அல்லது ஆத்மாவை அதன் தனிப்பட்ட நிலையில் இங்குதான் உள்ளது என்று குறிப்பிட்டுக் காட்ட முடியாது. 'வெறுவெளி' என்பதும்கூட ஒரு கற்பனையே எனவே ஆத்மா வெறும் வெளியில் உள்ளதாகவும் கூற இயலாது.

ஆத்ம சாட்சாத்காரம் என்பது வெறும் ஒரு சமயம் சார்ந்த நம்பிக்கை அல்ல. ஆத்ம எழுச்சியே சற்றும் பெறாத ஒருவனைவிட, அத்வைத ஞானம் இதுவரை பெறாமல், அதேசமயம் பேத உணர்வில் திருப்தி அடையாத ஒருவனே இழந்தவன் எனலாம்.

அதேசமயம் நம்மை பிறவித் தலையிலிருந்து விடுவிக்கும் பேரறிவு படிப்பினால் வருவதல்ல அது உள்ளுணர்வினால் வருவது. அந்த ஆன்மிக விடியல் நமக்கு உண்மையில் நாம் யார் என்பதை உணர்த்தி மீண்டும் நம்மை அஞ்ஞானத்தில் விழாமல் காக்கிறது. இறுதி அனுபவ நிலையில் ப்ரக்ஞை உணர்வு பிரிவுபடாமல் முழுமையாக ஜொலிக்கிறது. எழும் ஆனந்தமும் இடையறாது பெருக்கெடுக்கிறது. சச்சிதானந்தமாய் மிளிரும் ஆத்மா அங்கே அதுமட்டுமாய் உள்ளது. அது புதிதாய்ப் பெறப்படும் ஒன்றல்ல. அது நிரந்தரமாய் என்றைக்கும் உள்ள ஒன்று. நமக்குத் தேவை ஒன்றே "நான் ஆத்ம ஞானத்தை இதுகாறும் அடையவில்லை என்ற எண்ணத்தைக் கைவிடுவதே". பரம சத்யத்தை நாம் காணவிடாமல் தடுக்கும் அஞ்ஞானம் என்னும் மூடியை நீக்கி விடுங்கள். அறியாமை என்ற இருளை விரட்டுங்கள். அப்போது தானாக சுடர் விடும் ஆத்மா நமக்குள்ளே ஒளிர்வதை அறிவீர்கள்.

இந்த ஆத்ம சாட்சாத்காரத்தை இங்கேயே, இப்பொழுதே அடைய முடியும் என்பதுதான் பகவானின் சங்கநாதம். சில சமயம் அவரது உபதேசம் சொற்களாக வெளிப்பட்டது. பெரும்பாலும் அவரது உபதேசம் தெய்வீக மௌனத்தின் மூலம் உபதேசிக்கப்பட்டது.

உபநிடத ரிஷிகளான யாக்ஞவல்யரையும் ஜட பரதரையும் பயின்றுற்றோம். ஆனால் இன்று நம் முன்னிலையில் உபநிஷத்திற்கெல்லாம் உயிரோட்டமான உரையாக பகவான் தோன்றி உள்ளார். அவரிடம் சரணடைவோம்.



# ரமணசாமி யாரு!

## ரமண ராஜசேகர்

*அண்ணாமலை என்றாலே ரமணசாமிதான்! - அந்த*
*அருணாசல ரமணீயன் அன்புசாமி தான்!*
*கண்ணாலே தீட்சைதந்த கந்தசாமிதான்! - நம்*
*கவலைகளைத் தீர்க்கவந்த ஞானகுருதான்!*

*பசு,மான், குருங்குக் கூட்டம் சுற்றி நிற்குமே! - அது*
*பகவானை பார்த்து விட்டால் துள்ளிக் குதிக்குமே*
*பசியோடு வந்த அணிலும், மயிலும் சுற்றுமாம்! - ரமணர்*
*பாதம்தொட்டு பருப்புக்கேட்டு தின்று மகிழுமாம்!*

*சின்னப்பிள்ளை சிறுவர்கூட்டம் கோலி ஆடுமே! - அதில்*
*சேர்ந்து பகவான் இன்பமாக ஆடி மகிழுமே!*
*அன்னைபோல அன்புகொண்டு கருணை வழங்குவார் - மலையில்*
*ஏறிவரும் பிள்ளைபாதம் நோக வருந்துவார்!*

*சாதிமத பேதமற்று அருளைத் தந்தவர்! - மகான்*
*தன்னைப்பெற்ற தாயிக்கென்று கோயில் செய்தவர்!*
*மேதினியில் ஆத்மஞானம், யோகம் அறிந்தவர் - தான்*
*மேன்மையான ஞானியாகி உலகை வென்றவர்!*

# திரு. குருசாமி

திரு. குருசாமி, தலைவர் ரமண மந்திரம், மதுரை தனது 83 வது வயதில் 19-12-2015 அன்று பகவான் ரமணரின் திருவடி சேர்ந்தார். பகவான் ரமணரின் சீரிய தொண்டரான இவர் இந்திய வானிலை ஆய்வுத்துறையில் (India Meteorological Department) கொடைக்கானல், டெல்லி ஆகிய இடங்களில் பணியாற்றி சென்னையில் துணை வானிலை ஆய்வாளராக (Asst. Meteorologist) 1990ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.



இவர் டெல்லியில் பணிபுரிந்த போது இவர் துறையைச் சேர்ந்த சக ஊழியர் திரு K.C. சுப்பையா அவர்களின் வழிகாட்டுதலுடன் முதல் முறையாக டெல்லி ரமண கேந்திரத்தில் தம்மை இணைத்துக் கொண்டார். திரு C.G. பால சுப்ரமணியன் போன்ற சக ஊழியர்களின் தொடர்பு குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் இந்திய வானிலை ஆய்வு மைய டெல்லி குடியிருப்புகளில் ரமண சத்சங்கங்கள் நடைபெறும். டெல்லி ரமண கேந்திரத்தில் சீரிய ரமண தொண்டர்களும், மத்திய அரசின் மிக முக்கிய பொறுப்பான பணிகளில் பணியாற்றி வந்த திருவாளர்கள் பேராசிரியர் K. சுவாமிநாதன், A.R. நடராஜன், T.M. சுப்ரமணியன் (I.G), டெல்லி

ரமண கேந்திரத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தனர். திரு. குருசாமி, இவர்களின் வழிகாட்டுதலின்பேரில் ரமண கேந்திரத்தின் “சேவா சமிதி” என்னும் அமைப்பின் மூலமாக தமிழ் நாட்டில் இருந்து வந்து குடியேறின தமிழ் தொழிலாளர்களுக்கு வீடு அமைத்து கொடுத்தல் மற்றும் பல்வேறு உதவிகளையும் செய்யும் பணியில் தீவிர பங்காற்றினார். டெல்லி கேந்திரம் உருவானபோது அதில் இவரது முக்கிய பங்களிப்பு இருந்தது.

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் தங்கும் காலங்களில் திருவாளர்கள் முருகனார், சாதுஓம் மற்றும் ராமசாமி பிள்ளை அவர்களுடன் பழகி பகவானின் உபதேசங்களை அவர்களின் மூலமாக அறியும் பாக்யம் கிடைக்கப் பெற்றார்.

1987 ஆம் ஆண்டு மதுரை ரமண கேந்திரம் உருவானபோது அதன் தலைவராக திரு. S. ராமச்சந்திரன் செயலாளராக திரு. K. ரெங்கசாமி மற்றும் பொருளாளராக திரு. N. சோமசுந்தரம் அவர்கள் பொறுப்பேற்க அதன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

பணியிலிருந்து ஒய்வுபெற்ற பின்னர் மதுரை ரமண கேந்திரத்தின் தலைவராக தனது வாழ்நாளின் இறுதிவரை பணியாற்றினார்.

இவரது ஒரே மகளான திருமதி. டாக்டர் கலாராணி ரங்கசாமி மற்றும் மாப்பிள்ளை ரங்கசாமி இருவரும் அன்னாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பகவான் ரமணரின் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ரமணோதயம் தனது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# *செய்திகள்*

## திருவண்ணாமலை செய்திகள்

### 136 வது ரமண ஜயந்தி விழா

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 136 ஆவது ஜயந்தி வைபவம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் இவ்வாண்டும் கொண்டாடப்பட்டது. டிசம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை காலை மங்கள இசை, பாராயணம், மஹன்யாச ருத்ராபிஷேகம், சிறப்பு பூஜை, அபிஷேக அலங்காரங்களுடன் சிறப்பாக நடந்தேறின. இவ்வாண்டு சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*குரங்கு தோட்டத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் சாதுக்களுக்கு சிறப்பான முறையில் நாராயண சேவையும் ஜயந்தி விழாவிற்கு வந்திருந்த திரளான பக்தர்கள் அனைவருக்கும் ஆச்ரமத்தில் சிறப்பு உணவும் வழங்கப்பட்டது.*

*டிசம்பர் 25, 26 மற்றும் 28 ஆகிய நாட்களில் பெங்களூர் திருமதி. சக்குபாய் ஸ்ரீநிவாசன் குழுவினர், திரு. டி.எம். கிருஷ்ணா குழுவினர் மற்றும் திரு. பிரபாகர் மற்றும் குழுவினர் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் முறையே நடைபெற்றன.*

*இதேநாளில் ரமண ஜயந்தி விழா ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட மதுரை ரமண கேந்திரம், திருச்சுழி சுந்தர மந்திரம், இராமநாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் சென்னை, குரோம்பேட்டை ரமணாலயம் ஆகிய இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.*

## ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் 136 ஆவது ஜயந்தி விழா 27-12-2015 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 6 மணிக்கு மங்கள வாத்தியத்துடன் துவங்கிய இவ்விழா, மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம், ரமண சஹஸ்ரநாம*

*அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம் என்பதாக காலையில் கொண்டாடப்பட்டது. மதியம் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில் ஸ்ரீமதி ஷ்யாமளா ராமச்சந்திரன் ஹரிகதை நடந்தபின்னர் பகவானின் திருவுருவ வீதி உலா மயிலை மாட வீதிகளில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு விழா நிறைவுற்றது. 20-12-2015 முதல் 26-12-2015 வரை பகவானுக்கு லக்ஷார்ச்சனை தினமும் காலை 9 மணிக்கு தொடர்ந்து நடைபெற்றது.*

*3-1-2016 அன்று பகவானின் 'வாழ்வும் வாக்கும்' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. கும்பகோணம் திரு. அனந்த நாராயண பாகவதரின் நாமசங்கீர்த்தனம் மற்றும் திருவாளர்கள் இசைக்கவி ரமணன், டாக்டர் ராம்மோஹன் மற்றும் ராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த, ராமகிருஷ்ண விஜய ஆசிரியர் சுவாமி அபவர்கானந்தா ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெற்றன.*

## ரமணாலயம், குரோம்பேட்டை

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*டிசம்பர் 27 ஞாயிறன்று காலை மங்கள இசையுடன் துவங்கி வேதபாராயணம் ரமண அஷ்டோத்ர சதநாமாவளி நடைபெற்றது. 600 க்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில், சிட்லபாக்கம் ராதே கிருஷ்ண மண்டலி மகளிர் குழுவினர் 'ரமண சந்நிதிமுறை' பன்னிசையில் பாடினர். பின்னர் அனைவரும் கூட்டாக அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் மற்றும் தியானப் பாட்டு பாராயணம் செய்தனர். மதியம் அனைவருக்கும் சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது.*

# ரமண கேந்திரா செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் ஜயந்தி விழா டிசம்பர் 27 அன்று ஸ்ரீலஸ்ரீ பரானந்த மஹராஜ் அவர்கள் முன்னிலையில் (தாயுமானவ*

*ஸ்வாமிகள் தபோவனம்) காலை பத்து மணிக்கு துவங்கி அக்ஷரமணமாலை பாராயணம், சிறப்பு வழிபாடு, அன்னதானம் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள விழா சிறப்பாக நடைபெற்றது.*

## ஸ்ரீரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*3-1-2016 ஞாயிறன்று மாலை ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் பகவான் 136 ஆவது ஜயந்தி விழா நடைபெற்றது. அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கிய இவ்விழா சகோதரி. ஸ்ருதி சைதன்யா (சின்மயா மிஷன், பாண்டி) அவர்களின் 'உபதேச சாரம்' சிறப்பு சொற்பொழிவுடன் சிறப்பாக நடைபெற்றது.*

## ரமண சத்சங்கம், சூளைமேடு

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*டிசம்பர் 27 ஞாயிறன்று காலை 5.30 மணி முதல் மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம், ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம், அன்னதானத்துடன் சிறப்பாக நடைபெற்றது.*



ஸ்ரீரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

## ரமண சத்சங்கம், மேற்கு மாம்பலம்

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*3-1-2016 ஞாயிறன்று மேற்கு மாம்பல சங்கர மடத்தில் ஜயந்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவாசகம் முற்றோதல் மற்றும் ரமண சந்நிதிமுறை பாடல்கள் மயிலை கபாலீஸ்வரர் கோயில் ஓதுவார், திருவாசகச் செம்மல் சத்குருநாதன் இசைக்க இனிதே நடைபெற்றது.*

*10-1-2016 ஞாயிறன்று மேற்கு மாம்பலம் வீதிகளில் பகவானின் திருத்தேர் திருவீதி உலா நடைபெற்றது.*

*ரமண பகவானின் சீரிய தொண்டரும் பொறியாளருமான காலஞ்சென்ற* K.K. *நம்பியார் அவர்களின் கொள்ளுப் பேத்திகளான குமாரிகள் சஞ்சனா சிவக்குமார், சரண்யா சிவக்குமார் ஆகியோரின் பரதநாட்டியம் மேற்கு மாம்பலம் பகவானின் 136 ஆவது ஜயந்தி விழாவின்போது அனைவரையும் கவனத்தையும் கவரும் வண்ணம் சிறப்பாக அமைந்தது.*

## ரமண சத்சங்கம், பூண்டி, தஞ்சாவூர்

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*ரமண மகரிஷிகளின் 136 ஆவது ஜயந்தி விழா 30-12-2015 அன்று இங்கு அமைந்துள்ள ரமண திருக்கோயிலில் சிறப்பாகக்*



குமாரி சஞ்சனா, குமாரி சரண்யா - நாட்டிய நிகழ்ச்சி

*கொண்டாடப்பட்டது. அப்போது சிறப்புப் பாராயணம் மற்றும் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீரமண சத்சங்கம், வேலூர்

136 ஆவது ரமண ஜயந்தி விழா

*27-12-2015 ஞாயிறன்று மாலை அருள்மிகு தர்மராஜா ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. ரமண பகவான் அருளிய பாடல்கள் கூட்டுப் பாராயணம் மற்றும் திரு. தியாகராஜன் அவர்களின் சிறப்புரையுடன் நடைபெற்ற இவ்விழாவின் இறுதியில் பகவானுக்கு புஷ்பாஞ்சலியும் அனைவருக்கும் அருட் பிரசாதமும் வழங்கப்பட்டது.*

*தொடர்பு: சி.எஸ். நாகராஜன், வட்டாட்சியர், ஓய்வு அலைபேசி: 9345244925.*

* * *

## திரு. வெங்கடேச சாஸ்திரி

*ரமணாச்ரமத்தைச் சார்ந்த திரு. டி.வி. சந்திரமௌலி அவர்களின் தகப்பனார் திரு. வெங்கடேச சாஸ்திரி 29-11-2015 அன்று தமது 92 ஆவது வயதில் அருணாசலத்தில் ஐக்கியமானார்.*



*வெங்கடேச சாஸ்திரிகளின் தந்தை திரு. ஐயாசாமி அவர்கள் பகவானைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர் ஆவார். ஐயாசாமி அவர்கள் கார்த்திகை தீபோற்சவ காலங்களில் வேத விற்பன்னர்களுக்கு பல ஆண்டுகள் உணவளிக்கும் பாக்கியம் பெற்றவர் ஆவார்.*

*சாஸ்திரி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ரமணோதயம் பிரார்த்திக்கின்றது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** ரமணாலயம் | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |
| ஓசூர் அசோக்குமார் | .......... | 8643842772 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# 136 ஆவது ரமண ஜயந்தி விழாக் காட்சிகள்












Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

